யாழ்ப்பாண பொதுநூலகம்

# சர்வாதிகாரப் பாதையில் அக்கினோ?


விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 பங்குனி 14 ரஜப் 15 இதழ் 45
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27-3-1986


[மணிலா]

பிலிப்பைன்ஸின் புதிய ஜனாதிபதி திருமதி அக்கினோ பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டதையும், ஆணை ஒன்றின் வாயிலாக அதிகாரத்தைப் பெற்றுவிட்டதையும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆட்சேபித்துள்ளார்கள்.

மார்க்கோஸ் ஆதரவான பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி திருமதி அக்கினோ ஆதரவான பாராளுமன்ற உறுப்பினர்களும் இதனை எதிர்த்துள்ளனர்.

பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்தது சட்டவிரோதமானது; அரசியல் சாசனத்துக்கு முரணானது என்று அவரது ஆதரவாளர்களில் ஒருவர் தெரிவித்தார் சர்வாதிகாரப் பாதையில் திருமதி அக்கினோ செல்கின்றார் என்றும், அவரது நடவடிக்கையை எதிர்க்கப் பாராளுமன்றக்கூட்டத்தை அழைக்க வேண்டுமென்றும், முன்னாள் தொழிலமைச்சர் கூறியுள்ளார். இடைக்கால அரசியல் சாசனம் ஒன்று அமுலுக்கு வந்துள்ளதாக திருமதி அக்கினோ நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார். [ச]

## முன்னாள் ஐ நா. செயலாளர் கொலைகாரராம்!

(கொழும்பு)

முன்னாள் ஐ நா. செயலாளர் வால்ட் ஹெய்ம் ஒரு யுத்தக் குற்றவாளியாகத் தேடப்பட்டுவந்தவர் என்று யூகோஸ்லாவிய பத்திரிகைச் செய்தியை ஆதாரங்காட்டி இலங்கைவானொலி நேற்றிரவு கூறியது.

1947 டிசம்பர் 18ம் திகதி என்று குறிக்கப்பட்டுள்ள யூகோஸ்லாவிய யுத்த குற்றவியல் ஆணை குழுத் தஸ்தாவேஜில் கொலைகள், பணயக்கைதிகளைச் சுட்டுக்கொன்றமை, உடைமைகளைச் சேதப்படுத்தியமை சம்பந்தமாக வால்ட் ஹெய்ம் தேடப்பட்டு வந்தார் என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது என அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ச)

# இலங்கை சீனுவிடம் கோரிய ராணுவ உதவி நிராகரிப்பு!

## இனப் பிரச்னைத் தீர்வுக்கு இடையூறு செய்யுமாம்

[புதுடில்லி]

இலங்கையில் தமிழ்ப்போராளிகளைச் சமாளிக்க இராணுவ உதவி வழங்குமாறு இலங்கை அரசுவிடுத்த வேண்டுகோளை சீனு நிராகரித்துள்ளதாகவும், சீன அதிபர் திரு. லீ சியானியன் கடந்தமாத முற்பகுதியில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ நட்புறவு விஜயமொன்றினை மேற்கொண்டிருந்த வேளையில் இலங்கை அரசு மேற்படி வேண்டுகோளை விடுத்திருந்ததாகவும் ஏஜென்சி செய்திகளை ஆதாரங்காட்டி 'ஆல் இண்டியா றேடியோ' நேற்றிரவு தெரிவித்தது.

இலங்கைக்கு அளிக்கப்படும் எந்தவொரு இராணுவ உதவியும் அந்நாட்டின் இனப்பிரச்னைக்கான தீர்வுமுயற்சிகளை முடங்கச் செய்துவிடும் என்று கூறிய சீன அதிபர் இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணுவதில் இந்தியா வகிக்கும் மத்தியஸ்தத்தைப் பாராட்டியுள்ளதாகவும் இச்செய்தி மேலும் தெரிவித்தது.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் வளர்ந்துவரும் இராணுவ கூட்டில் சீனுவும் புதிய 'பங்காளி' யாகச் சேர்ந்துள்ளது என்ற ரீதியில் செய்திகள் முன்னரே அடிபட்டமையும் இவ்விடயம் தொடர்பாக இந்திய லோக்சபாவில் சூடான வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றமையும் இங்கு நினைவு கூரத்தக்கது.

தீவிரவாதிகளுக்கு எதிரான யுத்தத்தில் பயன்படுத்தவென ஆயுதங்களையும், பீரங்கிப் படகுகளையும் வாங்க இலங்கைக்குச் சீனு உதவிசெய்ய இணக்கம் தெரிவித்துள்ளது என நேற்றுமுன்தினம் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கத்தின் அதிகாரபூர்வமான பேச்சாளர் திரு. அன்ரன் பாலசிங்கம் சென்னையில் பத்திரிகையாளருக்களித்த பேட்டியில் கூறியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. [ச-ஷ]

## சடலங்கள் மீட்கப்பட்டன

[வல்வெட்டித்துறை]

கடந்த வெள்ளிக்கிழமை முதல் நேற்றுவரை தொண்டமானுறு செல்வச்சந்நிதி கோவிலில் முருகனைத் தொழச் சென்ற பக்தர்களில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானோர் விபரம்:

மு. கந்தசாமி [70 வயது] பருத்தித்துறையைச் சேர்ந்தவர், சோ. சுப்பிரமணியம் [50 வயது] தெல்லிப்பளையைச் சேர்ந்தவர், செ. சண்முகம் [60 வயது] ஊர்தெரியவில்லை, க. ஆறுமுகம் [50 வயது] தொண்டமானுறு பல நோ. கூ. சங்க காவலாளி.

கோவிலடியில இரண்டுநாட்களாகக் கிடந்த இருசடலங்களும் கடந்த இரவு அழுகிய நிலையில் மீட்கப்பட்டன. இருந்தும் கோவிலில் பூஜைகள் இன்னும் நடைபெறவில்லை.

வல்வெட்டித்துறை இராணுவமுகாமுக்கு 200 யார் சமீபமாக இரண்டு நாட்களின் முன்பு சுடப்பட்ட வயோதிபரின் சடலமும் கடந்த இரவு மீட்கப்பட்டது. இவர் ஒரு சித்தசுவாதீனமற்றவர்.

# கட்டுவன் பகுதியில் 4 மணிநேர ஆகாய தாக்கு

(ஏ. வி. மாணிக்கம்)

**பலாலியிலுள்ள விமானப்படை தரைப்படைகளுக்கு அண்மையிலுள்ள தெல்லிப்பழை-கட்டுவன் பகுதி நேற்று மீண்டும் ஆகாயத்தாக்குதலுக்கு இலக்கானது.**

**காலை 11 மணியிலிருந்து 4 மணிநேரம் தொடர்ந்து இடம்பெற்ற இத்தாக்குதலில் ஒருவர் பலியானார். இளம்பெண் உட்பட 5 பேர் படுகாயமுற்றனர். 15 வீடுகள் சேதமுற்றன. இவற்றில் ஒரு குடிசை எரிந்து சாம்பலானது.**

ஆகாயத் தாக்குதல் நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதென அரசு தீர்மானம் மேற்கொண்ட 48 மணித்தியாலங்களினுள் இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது. இப்பதற்ற நிலையைத் தொடர்ந்து வீடுகளிலிருந்து மக்கள் அகதிகளாக வெளியேறி அயல்கிராமங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கியாலும், ஷெல்களாலும் நான்கு மணித்தியாலங்கள் இத்தாக்குதல் இடம்பெற்றது.

அப்பாவிக் குழந்தைகளும், பெண்களும், சிறுவர்களும் ஆண்களும், வயோதிபர்களும் கட்டிடங்களின் 'பிளாட்' ஓரங்களில் மறைந்து கொண்டனர் துப்பாக்கி, குண்டு வெடிச்சத்தங்களால் சிறுவர்கள் மயக்கமடைந்து வீழ்ந்தனர் எல்லோரும் பொதுவாக தத்தம் குல தெய்வங்களை வேண்டிக் கொண்டு, பிராத்தனை செய்தனர்.

இத்தாக்குதலின் அதிர்ச்சி குரும்பசிட்டி, ஏழாலை, குப்பிளான், வறுத்தலைவிளான் ஆகிய பகுதிகளையும் பீதியடையச் செய்தது

பொதுவாக நேற்று முழுநாளும் தாக்குதலுக்குள்ளானன

[5ம் பக்கம் பார்க்க]

## சம்பளம் வழங்கப்படவில்லை

# வ. போ. ச. ஊழியர் வேலைக்கு செல்லவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் வ. பி. போ. ச. டிப்போவைச் சேர்ந்த சுமார் 600 ஊழியர்களுக்கு பெப்ரவரி மாதச் சம்பளம் வழங்கப்படாததினால் நேற்று ஊழியர்கள் வேலைக்குச்செல்லவில்லை.

பெப்ரவரி மாதச்சம்பளமாக 13 லட்சம் ரூபா கொடுக்க வேண்டியிருப்பதாயும் டிப்போவில் பணம் இல்லாததினால் சம்பளம் வழங்கப்படவில்லை என்றும் டிப்போ வட்டாரங்கள் தெரிவித்தன.

காரைநகர், பருத்தித்துறை டிப்போக்களில் குறைவான ஊழியர்களே உள்ளனரென்றும், இவர்களில் சிலருக்குச் சம்பளம் வழங்கப்பட்டுளளதாகவும், மற்றவர்களுக்குச் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இவ்விரு டிப்போ பஸ்கள் நேற்றுச் சேவையில் ஈடுபட்டன.

இ. போ. ச. தலைமைக்காரியாலயத்திலிருந்து சம்பளப் பணம் இன்னும் வந்துசேரவில்லையென்றும், யாழ். டிப்போவில் சம்பளம் வழங்க பணமில்லை என்றும் டிப்போ வட்டாரங்கள் தெரிவித்தன. [க]

# கோணேசர் கோவிலில் விக்கிரகங்கள் திருட்டு!

[திருகோணமலை]

பாடல்பெற்ற தலமான திருக்கோணேஸ்வரர் தேவஸ்தானத்திலிருந்த ஏழு விக்கிரகங்கள் களவாடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, வருடாந்த உற்சவம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

பிள்ளையார், வள்ளி, தெய்வயானை, முருகன், சூரியன், சந்திரன், நாகதம்பிரான் ஆகிய ஏழு விக்கிரகங்களின் சிலைகளே களவாடப்பட்டவையாகும்.

இக்களவு சில விஷமிகளின் திட்டமிட்ட செயலாக இருக்க

[5ம் பக்கம் பார்க்க]

## சாம்பல்தீவில் படையினர் சுட்டு

# இருவர் பலி! 18 பேர் கைது

திருகோணமலை)

சாம்பல்தீவுப் பகுதியில் ஆயுதப்படையினர் சுற்றிவளைத்து சோதனை நடாத்தித் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் இருவர் பலியானார்கள். 18பேர் கைது செய்யப்பட்டனர்

நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

சாம்பல்தீவு, 3ம் கட்டையில் வீதித்தடைபோட்டுள்ள ஆயுதப்படையினர் போக்குவரத்துச் சேவையிலீடுபட்டுள்ள வாகனங்களைச் சோதனை நடாத்திவருகின்றனர். [மா]

## திட்டமிட்டபடி

# இன்று தீவட்டி ஊர்வலம்!

## 15 கூட்டமைப்புகள் நடாத்துகின்றன

(யாழ்ப்பாணம்)

அண்ணா தி. மு. க. தலைமையிலான பதினைந்து கூட்டு அமைப்புக்களும் இணைந்து திட்டமிட்டபடி இன்று பிற்பகல் தீவட்டிப் போராட்டத்தை நடாத்தும்.

தீவட்டிப் போராட்டத்தை முன்னிட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட மாட்டாதென்றும் வர்த்தகர்கள் மட்டும் பிற்பகல் இரண்டுமணியுடன்கடைகளைப் பூட்டிக்கொள்வர் என்றும் அமைப்பாளர்கள் தெரிவித்தனர். ஏனைய சேவைகள் வழமைபோல் நடைபெறுமாம்.

தீவட்டி ஊர்வலம் பிற்பகல் 4 மணிக்கு யாழ் வண்ணைச் சிவன் கோவிலிலிருந்துஆரம்ப

(5ம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

தேக்கு வோம்(Foam 'குஷன் செற்றிசெற், (Veranda Chairs) ரியூட்டறி மேசை, வாங்கு மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: யூனைட்டெட் எஞ்சினியர்ஸ். சாயி மர அரிவு ஆலை 91, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
[A 514]

கொழும்புத்துறையில் விபுலானந்தர் வீதியில் நல்ல தண்ணீர், வீட்டு வசதியுடன் 4½ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. பகுதி பகுதியாகவும் கொடுக்கப்படும். விளம்பர இல. A 510, C/o Eelanadu, யாழ்ப்பாணம்.
[A 510)

## தேவை

எமது தொழிற்சாலைக்கு கணக்கியல் அறிவும் நல்லொழுக்கமுமுள்ள ஒருவர் உடன் தேவை. தங்குமிட வசதியும் உண்டு, தொடர்பு: விள. இல C1116, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம்
(C 1416)

பலாலி வீதி அல்லது ஸ்ரான்லி வீதியில் காரியாலயமும் காட்சியறையும் திறப்பதற்கு 1000 ச. அடி விஸ்தீரணமுள்ள கட்டிடம் வாடகைக்குத் தேவை. விளம்பர இல. A 513, மே/பா ஈழ நாடு, யாழ்ப்பாணம்.
(A 513)

## வகுப்புகள்

ரேடியோ - ரி.வி., வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், சுருக்கெழுத்து, தட்டெழுத்து — புதிய பிரிவுகள் 28-03-86 29-03-86 இல் ஆரம்பமாகின்றன. முதலில் சேருபவரிடம் குறைந்த கட்டணம் அறவிடப்படும். சான்றிதழ் பெறுமதியானவை Vispa Engineering, 328, நாவலர் வீதி. யாழ்ப்பாணம்.
[C 1408]

### மன்னூர் இ. போ. ச. டிப்போ இடமாற்றம்

(தாராபுரம்)

மன்னூர் மாவட்ட இ. போ. சபை டிப்போ, மன்னூர் பட்டி தோட்டம் என்னுமிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த டிப்போ முன்னர் பஸார் வீதிக்கும் புகையிரத நிலையத்துக்கும் அண்மையில் இயங்கிவந்தது இந்த டிப்போவுக்கான நிர்மாண வேலைகள் 82 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, தற்போதுதான் திறக்கப்பட்டுள்ளது. புதிய டிப்போவைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னூர் மாவட்ட அமைச்சின் செயலாளர் ஜனுப் எம். ரசீது சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தார். புதிய டிப்போ, மன்னூர் தாழ்வுப்பகுதி ஊடாகச்செல்லும் வழியில் பட்டி தோட்டம் என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

சாவகச்சேரி
ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச்சாக்கு விற்பனை அறிவித்தல்

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 5000 வெற்றுச்சாக்குகள் விற்பனைக்கு இருக்கிறது. கொள்வனவு செய்ய விரும்புவோர் தமது கேள்விகளை வைப்புப் பணம் ரூபா 300/-ம் கேள்விப் பத்திரப்பணம் ரூபா 10/-ம் செலுத்தி சங்கத்தில் பெறும் படிவத்தில் 3-4-86 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு முன் சங்கத்தில் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும். அல்லது சங்கத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடவேண்டும்.

பொது முகாமையாளர்,
சாவகச்சேரி,
22-3-86. (A 516)

## 3-ம் மாத நினைவஞ்சலி



செல்வி வத்சலா பொன்னையா

அன்னையின் மடியில்: 11—1—1959

ஆண்டவன் அடியில்: 23—1—1986

எங்கள் அன்புச் செல்வமே!

காலைச்சுற்றியது நச்சுப்பாம்பு என்று அறிந்த பின்பும் நழுவத் தெரியாமலா உன் உயிரை அர்ப்பணித்தாய்! கோழைகளின் வஞ்சனைக்கும் கெடுபிடிக்கும் எதிர்நிற்கமாட்டாமல் உயிரிழந்தாயே! ஏன் பொறுத்திருந்து பார்க்க பொறுமையற்றுப் போய்விட்டதா? சத்தியம் தோற்றதென்று சரித்திரமில்லை மகளே! இறைவனின் சந்நிதியில் இப்பொழுதுநீயிருப்பாய்! இறைவனின் நீதியை எடுத்தியம்பு மகளே! ஏழை அழுத கண்ணீர் கூரியவாளென்றால் விரைவிலே விடைகிடைக்கும்.

உன்ஆத்மா சாந்தி அடைவதாக!

உன் பிரிவால் தவிக்கும்

பெற்றோர்,
சகோதரர்கள்,
உறவினர்கள்,
நண்பர்கள்.

தாமரை வாசம்,
கோயிற்கடவை,
கரவெட்டி.

C 1418

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## ஓராண்டு நினைவில்



திரு. ஆறுமுகம் பொன்னம்பலம்

மண்ணில்: 07-03-1922
விண்ணில்; 08-04-1985
திதி: 27-03-1986

எமது இனிய சீரிய வாழ்விற்கும், சமயநெறிக்கும் மனம் தளரா வழிகாட்டியாக இருந்து தன்னை எமக்காகவே அர்ப்பணித்து நற்செய்கைகள் பல செய்தும், செய்விக்தும், கண்டித்தும், அன்காட்டியும் எம்மை நலவழிப் படுத்திய எமது குடும்பத் தலைவனின் உயிர் அமைதியடைய கடவுளைப் பணிகிறோம்.

அன்பு மனைவி
பொ. பொன்னம்மா,
அன்பு மகன்
இராசகுலேந்திரன்,
பேரப்பிள்ளைகள்.

'பொன் இல்லம்',
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.
(C-1431)

## தடுப்பு நடவடிக்கை

[மானிப்பாய்]

நாய்களுக்கு விசர் வராது தடுப்பு நடவடிக்கை எடுக்குமுகமாகச் சுகாதாரப் பகுதியினர் தற்போது பல இடங்களிலும் விசர் தடுப்பு ஊசி ஏற்றிவருகின்றார்கள்.

சென்ற வாரம் ஆனைக்கோட்டைப் பகுதியில் இந்த நோய்த் தடுப்பு ஊசி இங்குள்ள பல நாய்களுக்குப் போடப்பட்டது.

வெயில் காலத்திலேயே இவ்வித நோய் நாய்களுக்கு அதிகம் பரவுவதால் மக்களின் நலன் கருதி நாய்களை வீதிகளில் திரிய அனுமதிக்க வேண்டாமென ஆலோசனையும் இவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனிமையில் அந்தவழியாக சென்றவர் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி இராணுவமுகாமுள்ள கண்டிவீதியால் இரவு நேரம் தன்னந்தனியாகச் சைக்கிளில் சென்ற நபர் தாக்கப்பட்டுள்ளார் இந்நபர் யாழ். ஆஸ்பத்திரியில் இப்போது சிகிச்சைபெற்று வருகிறார்.

திங்கட்கிழமைஇரவு 8 மணியளவில் தச்சன்தோப்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த கந்தன் நாகராசா (28 வயது) என்றநபரே தாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

தனது மனைவியின் ஊரான இணுவிலிலிருந்து தச்சன் தோப்பிலுள்ள தனது தாயாரின் வீட்டை நோக்கிச் செல்லும் போது இச்சம்பவம்நடைபெற்றதாம். (ஐ)

# "அறிவியல் கல்விக்கு ஆங்கிலம் அவசியம்"

(யாழ்ப்பாணம்)

''இன்றைய விஞ்ஞான யுகத்திலே பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் தமது ஆங்கில அறிவைப் பல வழிகளிலும் விருத்தி செய்து கொள்ளவேண்டும். தொழில்நுட்பம், விஞ்ஞானம், வைத்தியம் போன்ற உயர் துறைகளில் கல்விபெற விரும்பும் மாணவருக்கு ஆங்கிலம் இன்றியமையாதது. எனவேதான் அரசு ஆரம்ப பாடசாலைகளிலே 4 ம் ஆண்டில் இருந்து ஆங்கிலக் கல்விக்கு வேண்டிய வசதிகளைச் செய்துள்ளது.''

இவ்வாறு யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெற்ற ஆங்கில தினப்போட்டிக்குத் தலைமை வகித்துப் பேசிய கல்லூரி அதிபர் மு திருஞானசம்பந்தபிள்ளை கூறினார். மேலும் அவர் பேசுகையில்; ''அரசாங்கத்தின் நோக்கங்களையும், திணைக்களத்தின் அறிவுறுத்தல்களையும் கருத்தில் கொண்டே இப் பாடசாலையில் வருடா வருடம் இத்தகைய ஆங்கில தினப்போட்டிகள் நடாத்தப்பட்டுப் பரிசில்கள்'' வழங்கி மாணவர்களை ஊக்கப்படுத்துகின்றோம் என்றார்.

விழாவுக்குப் பிரதம விருந்தினராக வருகைதந்த நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு சு சிவநாயகமூர்த்தி மாணவர்களின் திறனையும் ஆசிரியர்களின் முயற்சியையும் பாராட்டி வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

4 ம் ஆண்டில் செல்விகள் ம. சஜுதனி, பி. வித்தியதர்சினி, எஸ். பிரியதர்சினி, எஸ். தட்சாயணி, செல்வன் கே. பிரஜீவன், எஸ். ஞானலிங்கம் ஆகியோரும்.

5 ம் ஆண்டில் கே. கௌரீஸ்வரி, டபிள்யூ சத்தியஜித், ஜே. ஜெயகாந்தன், ஆர். பார்த்தீபன், கே. அமுதா, என். இந்திரநாத், எஸ். ரஜனி, எஸ், சுயாத்தா ஆகியோரும்.

6 ம் ஆண்டில் பி கோகுலன் பி. அனுஷன், வி. நிமலன், பி. சிவ கணேசன், எஸ். விஜயராஜ், எஸ். சுதர்சன், எம். ஆனந்த ரூபன், எம். புவிராஜ், எஸ். ரட்ண பிரகாஷ் ஆகியோரும் வெற்றி பெற்றனர்.

## கவலை

(வவனியா)

வவனியா கல்விபிராந்தியத்தில் விசேடமாக விளையாட்டு, மனையியல், விவசாயம், சங்கீதம் போன்ற பாடங்களுக்கு வட்டாரக் கல்வியதிகாரிகள் இல்லாததுபற்றி வவனியா கல்வித்திணைக்கள வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு வவனியா கல்விப்பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் முயற்சியெடுத்துள்ளார்.

## சேவை

மலிவு விலையில் தரமான தளபாடங்கள்
குறித்த நேரத்தில் தயாரிப்பவர்கள்
**யூனைட்டெட் என்சினியர்ஸ்,**
**சாயி மர அரிவு ஆலை,**
91, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.
(A 414)

தந்தை செல்வா ஞாபகார்த்த

## கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி

அறவழிப் போராட்டக்குழு
வடகிழக்கு மாகாண ரீதியிலான
கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியினை சித்திரை மாதம் நடாத்தவுள்ளது.
கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள்
7-4-86க்கு முன் விண்ணப்பிக்கவும்.
**அறவழிப் போராட்டக்குழு,**
த. பெ. இல. 2, சாவகச்சேரி.
(A 515)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!
29-3-1986 சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் வரும் சுபவேளையில்

| | |
|---|---|
| எமது மகன்<br>திருநிறை செல்வன்<br>**பத்மநாதன்**<br>அவர்கட்கும்<br>(கரம்பொன் கிழக்கு,<br>மு. சம்பித்துரை<br>தம்பதியரின்<br>சிரேஷ்ட புதல்வன்) | எமது மகள்<br>திருநிறை செல்வி<br>**மங்கயற்கரசி**<br>அவர்கட்கும்<br>(புங்குடுதீவு K M.<br>சின்னத்துரை தம்பதியரின்<br>புதல்வி) |

இலண்டனிலுள்ள விநாயகர் ஆலயத்தில் இறைவனருளால் திருமண வைபவம் இடம்பெற உள்ளது என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

| | |
|---|---|
| R. S V. P.<br>17 A, Southcrott Road,<br>Orpingtow.<br>Kent, U. K<br>Tel: 068977436. | R. S. V. P.<br>63, Craigen Avenue,<br>Shirley Park<br>Croydon ( RO75Q.<br>Tel: 01-6548682/01-6565987. |
| Mr and Mrs.<br>M. Thambythurai,<br>71/5, Kachcheri Nallur Road<br>Jaffna. | Mr and Mrs<br>M S. Shanmugarajah,<br>Vidanayar Illam,<br>Pungudutivu. |

(C-1426)

## ‘சியற்றே’ வளைகுடா மோதல்

# 177 லிபிய கடற்படை மாலுமிகள் மரணம்?

## மேலும் இரு கப்பல்களை அமெரிக்க கடற்படை மூழ்கடித்தது!!

வாஷிங்டன், மார்ச் 26

**நேற்றுமுன்தினம் லிபியாவின் சியற்றே வளைகுடாவில் இடம்பெற்ற நடீர் மோதலில் சுமார் 177 லிபிய கடற்படையினர் கொல்லப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது. அமெரிக்கா மொத்தம் நான்கு லிபிய போர்க்கப்பல்களை தாக்கியுள்ளது-இந்த நான்கிலுமே மேற்குறிப்பிட்ட தொகையினர் மாண்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அமெரிக்கா அதன் முதலாவது தாக்குதலின் போது இரு கப்பல்களை மூழ்கடித்தது. இந்த இரு கப்பல்களும் லிபியாவின் ஏவுகணைத் தாங்கிகள் எனக் கூறப்பட்டது. இவற்றில் ஒன்றில் 27 பேர் இருந்ததாகவும், அவர்கள் அனைவரும் மூழ்கடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து இரண்டாவது தடவையாக மேலும் இரு லிபிய ஏவுகணை செலுத்தும் கல்பல்களை அமெரிக்க விமானங்கள் தாக்கி மூழ்கடித்தன. இக்கப்பல்களில் ஒன்றிலிருந்த சுமார் 150கடற்படை மாலுமிகளும் கொல்லப்பட்டிருக்கலாமென்று அறிவிக்கப்பட்டுள்ளது

இதுதவிர அமெரிக்கா இரண்டாவது தடவையாகவும் சியற்றே கரையோர நகரிலுள்ள லிபியாவின் ‘ராடர்’ அவதான நிலையமொன்றைக் குண்டுவீசித் தாக்கியுள்ளது.

தமது ஆறுவது கடற்படையை நெருங்கும் எந்தவொரு லிபிய சாதனமும் நிர்மூலமாக்கப்படும்என அமெரிக்கா கடும் எச்சரிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

தற்போது ஒரு போராக மாறியுள்ள அமெரிக்காவின் கடற்படை ஒத்திகைகள பத்துத் தினங்கள்வரை மத்திய தரைக்கடலில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தன ஆயினும் அமெரிக்கா இந்தவார இறுதியுடன் இந்த ஒத்திகைகளை முடித்துக்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இத்தாக்குதல் ஏற்கனவே திட்டமிடப்பட்டதொன்றெனவும் கூறப்பட்டது. இரு மாதங்களுக்கு முன்னரே இதற்கான திட்டமிடப்பட்டு அமெரிக்க விமானங்கள் கடந்தசில வாரங்களாக லிபிய ஏவுகணைத் தளங்களை நோட்டமிட்டுவந்தன என்றும் அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகமான ‘பென்ரகனே’ ஆதாரம் காட்டி செய்திகள்வெளியாகியுள்ளன. [கி]

உலகச் செய்திகள்

## ஹோலிப் பண்டிகை

புதுடில்லி, மார்ச் 26.

இந்தியாவில் வண்ண நிறங்களை வாரி இறைக்கும் ‘ஹோலிப்’ பண்டிகை நேற்று முன்தினம் ஆரம்பமானது

பாரம்பரிய முறைப்படி மதுராவில் இப்பண்டிகை நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து இந்தியாவின் சகல கிருஷ்ண வழிபாட்டுத் தலங்களிலும் இந்தப்பண்டிகை களைகட்ட ஆரம்பித்தது

“தோழமை, மக்கள் நம்பிக்கை, உண்மை உணர்வு ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாக இப்பண்டிகை அமையட்டும்” என்று இந்திய ஜனாதிபதி ஸெயில் சிங் இப்பண்டிகையையொட்டி வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார். (கி)

## ‘தூர்தர்ஷன்’ நிலையம் முன்பாக தி. மு. க. வினர் ஆர்ப்பாட்டம்!

சென்னை, மார்ச் 26

இந்திய தொலைக் காட்சிச் சேவையான ‘தூர்தர்ஷன்’ நிலையம் முன்பாக நேற்றுத் தி. மு. க. வினர் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

தூர்தர்ஷனின் ‘நியூஸ் லைன்’ என்ற பேட்டி நிகழ்ச்சியில் தி மு க தலைவர் திரு மு. கருணாநிதியின் பேட்டி நிகழ்ச்சியொன்று ஒளிபரப்பப் படாததைத் தொடர்ந்தே இந்த ஆர்ப்பாட்டம் நிகழ்த்தப்பட்டது

அண்ணாசாலை வழியாக தி.மு.கஆதரவாளர்கள் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தினர். தி மு.க செயலாளர் திரு.கே. அன்பழகன் இந்த ஊர்வலத்துக்குத் தலைதாங்கினார்.

தி மு.க. தலைவர் திரு.மு.கருணாநிதிக்கு ஆதரவானகோஷங்களை எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள் தூர்தர்ஷனை எதிர்த்து பலமாகக் கோஷமிட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தினால் அண்ணாசாலைப் போக்குவரத்தும் சில மணி நேரம் ஸ்தம்பித்தது. (கி)

## தென்னாபிரிக்காவில்

# ஆறு பேர்மரணம்

## 3 பேர் தீமூட்டி எரிப்பு!

கேப்ரவுண், மார்ச் 26

தென்னாபிரிக்காவில் ஆறு பேர் கலவரங்களில் நேற்றுக் கொல்லப்பட்டனர். இவர்களில் மூன்று கறுப்பினத்தவர்கள் உயிருடன்தீமூட்டிக்கொல்லப்பட்டனர்.

இருவர் வடக்கு டிரான்ஸ்வாலிலும், ஒருவர் கேப்ரவுணிலும் தீ மூட்டப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

இதேவேளை இரு பொலிஸ்காரர்கள் கலகக்காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். சுவேற்ரோ என்ற இடத்தில் நபர் ஒருவர் பலத்த காயங்களுடன ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

ஒரு புதிய சட்டமூலம் தொடர்பாகவே இந்தக் கலவரம் வெடித்திருந்தது எனத் தென்னாபிரிக்கா அரசு தெரிவித்தது. (கி)

## அமெரிக்கதாக்குதல்

# சோவியத்யூனியன் பலமான கண்டனம்!

மாஸ்க்கோ. மார்ச் 26

லிபிய நீர்ப்பிரதேசத்தில் அமெரிக்கா நடத்திய தாக்குதலை சோவியத்யூனியன் வெகுவாகக் கண்டித்துள்ளது.

சோவியத் வெளிவிவகார அமைச்சு இதுகுறித்து கருத்து வெளியிடுகையில் அமெரிக்காவின் இத்தாக்குதல் நடவடிக்கை மேற்குஆசியாவை மட்டுமல்லாது சுமுகமான உலக சூழலையே நஞ்சாக்குவதாகக் காணப்படுகிறது எனக் குறிப்பிட்டுள்ளது.

லிபியாமீதான தாக்குதலை அமெரிக்கா எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்த முடியாதென்று சோவியத் மேலும் தெரிவித்துள்ளது.

சோவியத்யூனியனின் உத்தியோகபூர்வ செய்தி ஸ்தாபனமான டாஸ் கருத்துவெளியிடுகையில், மத்தியகிழக்குப் பிராந்தியத்தில் படுமோசமான பயங்கர நிலைமையை ஏற்படுத்துவதாக அமெரிக்காவின் இந்த தாக்குதல் நடவடிக்கை அமைந்து காணப்படுகிறது எனத் தெரிவித்துள்ளது.

சோவியத்யூனியன் முன்பு அமெரிக்கா லிபியா மீது விடுத்த மிரட்டலொன்றுக்குப்பதிலளிக்கையில் லிபியா தாக்கப்பட்டால் சோவியத் அந்தநாட்டுக்கு இராணுவ உதவிகளை வழங்கும் எனத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## லிபியா ‘சாம்-5’

# ஏவுகணைகளையே பாவித்ததாம்!

### — அமெரிக்கா

வாஷிங்டன், மார்ச்,26

மத்தியதரைக் கடலிலிருந்த தமது 6-வது கடற்படை அணி மீது சோவியத் தயாரிப்பான ‘சாம்—5’ ஏவுகணைகளையே லிபியா பிரயோகித்ததாக அமெரிக்கா கூறியுள்ளது.

இதனைத்தொடர்ந்தே இந்த ரக ஏவுகணைகள் பொருத்தி வைக்கப்பட்டிருந்த இரு லிபியத் தளங்களைத் தமது விமானங்கள் தாக்கின என்று அமெரிக்கா தெரிவித்தது.

அமெரிக்கா மூழ்கடித்த 4 லிபிய கப்பல்களிலும் கூட இந்த ‘சாம்—5’ ரக ஏவுகணைகள் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதலையடுத்து லிபிய விமானங்களோ அல்லது கப்பல்களோ பதிலடி எதிலும் இறங்கவில்லைஎனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. [கி]

## சுவிஸ் வங்கிகளில்

# மார்க்கோஸ் சொத்துக்கள் முடக்கப்பட்டன!

பேர்ண், மார்ச்,26

சுவிற்சர்லாந்து வங்கிகளிலுள்ள முன்னாள் பிலிப்பைன்ஸ் அதிபர் திரு. பேர்டினண்ட் மார்க்கோஸ் மற்றும் அவரது சகாக்களின் சொத்துக்களை முடக்குமாறு சுவிஸ் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

சுவிஸ் வங்கிகளில் மார்க்கோஸினதும் அவரது நெருங்கிய சகாக்களினதும் கோடிக்கணக்கான சொத்துக்கள் வைப்புச்செய்யப்பட்டுள்ளன கடந்த திங்கட்கிழமை இச்சொத்துக்களை அப்புறப்படுத்துவதற்கு திரு மார்க்கோஸ் சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனைத் தொடர்ந்தே இவற்றை மார்க்கோஸிடம் ஒப்படைக்காது முடக்கி விடும்படி சுவிஸ் அரசாங்கம் தனது வங்கிகளைக் கேட்டுள்ளது.

சுவிஸ் அரசின் இந்த நடவடிக்கையை புதிய பிலிப்பைன்ஸ் அரசாங்கம் வரவேற்றுள்ளது. அத்துடன் பிலிப்பைன்சுக்கு இச்சொத்துக்களை கொண்டுவருவதுபற்றி ஆராய திருமதி அக்கினோ அரசின் பிரதிநிதியொருவர் சுவிஸ் சென்றுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## கட்டணம்

(ஒட்டுசுட்டான்)

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் விவசாயம் செய்வதற்காக (ஈர்ப்பு முறையில்) நீர் பெற்று வரும் விவசாயிகள் அத்திட்டத்திலுள்ள குளத்தினை நிர்வகிப்பதற்கும் பராமரிப்பதற்குமாக ஒரு வருடம் ஒரு ஏக்கருக்கு ரூபா 100 வீதம் கட்டணம் செலுத்த வேண்டும் என்று முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர் இம் மாவட்ட விவசாயிகளைப் பணித்துள்ளார் இப்படி விவசாயிகளால் கட்டப்படும் பணம் அவர்கள் விவசாயம் செய்யும் திட்டத்தின் குளத்தினை பராமரித்தலுக்கும் நிர்வகித்தலுக்கும் பயன்படுத்தப்படும்.

1984, .985 ம் ஆண்டு கட்டணம் கட்டத் தவறிய விவசாயிகளுக்கு எதிராக நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் இப்பொழுது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது.

### மணிவாக்கு

''மேதினி தன்னில் வேதனை உண்டு
சோதனை நாளில் துணிவுடன் இருங்கள்!
உலகை நானே உருப்படியாக
வென்றுமுடித்தேன் விளங்கும் உமக்கு''

— இயேசு காவியம்

## நமதுநோக்கு

# பெண்கள் மூவர்

**வட** அயர்லாந்தில் பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிக்கப் போராடும் கெரிலா இயக்கம் இன்று அமெரிக்காவின் நியூயோர்க்கில் ''இங்கிலாந்தே! அயர்லாந்தை விட்டு வெளியேறு'' என்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்துகிறது

''வெள்ளையனே இந்தியாவைவிட்டு வெளியேறு'' என்று மகாத்மா காந்தி இந்தியதேசிய காங்கிரஸில் கடைசியாக முன்மொழிந்த கோரிக்கைபோன்றது இது.

அண்மையில் பிரதமர் தாட்சர் உருவாக்கிய ஆங்கில-ஐரிஷ் உடன்பாடு அதிகம் வேலை செய்யவில்லை. இரு பகுதியினரும் புறட்டெஸ்ட்டான்டுகளும், கத்தோலிக்கரும் அதனை எதிர்க்கின்றனர்.

தொடர்ந்து நடைபெறும் கெரிலா வன்செயல்களில் ஈடுபட்டிருந்ததாக, பிரிட்டிஷ் பொலிஸாரால் தேடப்பட்ட ஐரிஷ் பெண்மணி பெல்பாஸ்ட்டில் வசிக்கும் 27 வயதுடைய வீராங்கனை எவெலின் ஆவார்.

ஐரிஷ் தலைநகரான டப்ளின் கோர்ட் ஒன்றில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வந்த எவெலின், லண்டனில் பல கொலைகளுக்கும் குண்டு வீச்சுக்களுக்கும் குற்றம் சாட்டப்பட்டு நீதிபதி முன் ஆஜரானார். லண்டன் நீதவான் பிறப்பித்த பிடிஆணை அந்தக் கோர்ட்டில் செல்லுபடியாகாதென்று வழக்கைத் தள்ளிவிட்டார்.

தமது ஆதரவாளர்களுடன் கோர்ட்டை விட்டு வெளியேறி காரில் சென்ற இந்த இளம்பெண் மீண்டும் இடைவழியில் தடுக்கப்பட்டு இன்னொரு தற்காலிகமான ஐரிஷ் பிடிஆணையில் கோர்ட்டுக்குத் திரும்பவும் கொண்டுவரப்பட்டார்.

இரண்டாவது நீதவான் அவ்வித தற்காலிக ஐரிஸ் பிடிஆணை செல்லுபடியாகாதென்றும், முந்திய லண்டன் பிடிஆணைகளும் சட்டத்துக்கு அமையவில்லை என்று அப்பெண்ணை மீண்டும் விடுதலை செய்துவிட்டார்.

பெருந்திரளான ஆதரவாளர்கள் இந்த வீராங்கனையை பாதுகாப்பாக எவரும் அறியாத இடத்துக்கு அழைத்துச் சென்றனர்.

இங்கிலாந்தின் ஆட்சியில் இந்தப் பெண்மணி ஒரு கொலைகாரி ஆங்கில ஆட்சியில் இன்றும் நிர்வகிக்கப்படும் வட அயர்லாந்தில் இப் பெண்ணுக்கெதிராக வழக்கு எதுவுமில்லை என்பது அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு

ஐரிஷ் பெண்மணி ஒருவரின் கதையை விருப்புவெறுப்பின்றி உரைத்தோம்.

இரண்டாவது பெண்மணி நாம் பத்திரிகையில் அண்மையில் படித்த பிரிட்டிஷ் தொழிற்கட்சிஅரசியல்வாதியும் மனித உரிமைகள் சர்வதேச கமிட்டி உறுப்பினருமான டேம் ஜூடிக் ஹார்ட் Dame Judith Hart என்பவர்.

அண்மையில் இலங்கை வந்து இவ்விடயம் பற்றி நேரில் விசாரணை நடத்திய மனித உரிமைப் பாதுகாவலர் இவர்; இலங்கையின் நட்புக்குரியவரும் கூட.

பொதுமக்கள் கொல்லப்படுவதை நேரில் கண்டறிந்த இப்பெண்மணி மனித உரிமைகள் மட்டற்றமுறையில் இங்கு மீறப்படுவதால் இலங்கைக்கு உதவி அளிக்கும் நாடுகளுக்கு உதவியை நிறுத்த சிபாரிசு செய்வதாக எச்சரித்திருந்தார்.

நேரில் கண்டதை மூடி மறைக்கமுயல்வது மடமை. இருப்பினும் ''தமிழ்ப்போராளிகள் நாட்டின் ஆட்சியைக் கவிழ்க்க முயலும் ஒரு எதிர்ப்பியக்கமே என்ற அரசின் வாதத்துக்கு மூன்று வருடங்களுக்கு இதுதொடர்வது எவ்வாறு முடியும்'' என்ற கேள்வியை எழுப்பியிருந்தார்.

மக்கள் ஆதரவிருப்பதாலேயே இந்த எதிர்ப்பியக்கம் பலம் பெற்றிருக்கிறதென்ற பதிலைத் தாமே தெரிவித்தார். இந்த ஆங்கிலப் பெண்மணிக்கு எங்கள் 'தமிழ்' பெண் எம்.பி ரங்கநாயகி பத்மநாதன் கொடுத்த பதில் பச்சோந்தியின் பரிகாசம் போல தோன்றும்.

''தமிழ் மக்கள் போராளிகளை ஆதரிக்கவில்லை; தங்கள் உயிருக்கு அபாயம் என்பதால் அவர்கள் ஆதரவளிப்பதுபோல நடந்துகொள்கின்றனர்'' என்று சொன்னார். அனுபவம் நிறைந்த பிரிட்டிஷ் தொழிற் கட்சி எம். பி. க்கு இத்தகைய வாலுருவுதல் நன்கு புலப்படும்

வீரம், தேசியம், மனித நலம் போன்ற பண்புகளைப் பெண் உலகம் பேணிப் பாதுகாக்கவல்லதென்ற கருத்துக்கு இவ்விரு ஐரிஷ், ஆங்கிலப் பெண்களை உதாரணம் காட்டினோம்.

எழுத்தாளர், அதுவும் அனுபவம்பெற்ற எழுத்தாளர் என்ற போர்வையில் இலங்கை அரசின் அடாவடித்தனத்தை மூடிமறைத்து, தமிழ்ப் போராளிகளுக்கெதிரான பிரசாரப் பயணம் மேற்கொண்ட திருமதி வில்லிஸ்ஸை நாம் மறக்கவில்லை - 'புலியின்' குகைக்குள் பயங்கரமின்றி உள்ளிட்ட இவர் பற்றிய தகவல்களை எவரும் விரைவில் மறந்திருக்கமாட்டார்.

'ஈரோஸ்' இயக்கத்தால் கைதுசெய்யப்பட்டு ஒரு மாத விசாரணைக்குள்ளான வில்லிஸ் ஆங்கில மாது என்பதாலும், மனிதாபிமானம் என்ற அடிப்படையிலும் உயிருடன் நாடு திரும்பியதை உலகறியும்.

இலங்கை அரசுக்கு பிரசாரம் மேற்கொண்ட இப்பெண்மணிக்கு இந்தநாட்டில் எவ்வித பாதுகாப்பும் இருக்கவில்லை. தாமொரு துணிந்த ஒற்றர் என்ற நம்பிக்கையில் அரசின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது யாழ்ப்பாணம்வந்த இந்தக் 'கோடரிக் காம்பு' உயிர்ப்பிச்சை பெற்று வீடு திரும்பியதும் தமது வாசஸ்தான பாதுகாப்பிலிருந்து தமிழ்ப் போராளிகளை, திருமதி ரங்கநாயகியைப்போல் கண்டனம்செய்கின்றார்; ஆங்கிலகுலப் பெருமைக்குப் புறநடையான பேர்வழி!

பலகளம் கண்ட இத்தகையபோலி எழுத்தாளர், பணத்துக்காகப் பொய்யை மெய்யாகத் திரிக்கத் தயங்காத கூட்டத்தினர் வயிற்றுச் சோற்றுக்காகத் தமது பிறப்புரிமையை விற்கும் இக் கூட்டத்தினர் எங்கும் உண்டு. வாசகர்கள் இனங்காண்பதில் விழிப்பாக இருக்கவேண்டும்.

## இன்று பெரிய வியாழன்

# “இதை என் [redacted] நினைவாகச் செய்யுங்கள்!”

### அருட்திரு ஜே. கமிலஸ் நிமலன்

இயேசு பெருமானை ஆண்டவனாக வழிபடும் கிறீஸ்தவர்களுக்குப் பெரிய வியாழக்கிழமை மிகவும் முக்கியமானஓர் நாளாகும். ஏனெனில் தாம் பாடுபடுவதற்கு முந்தின நாளான வியாழக் கிழமையன்றுதான் இயேசு நற்கருணை எனும் அருட்தானத்தைஏற்படுத்தினார். தருத்துவம் எனும் அருட்சாதனத்தை ஏற்படுத்தியநாளும்இதுவே. இப்புனித நாளில்தான் தன் சீடர்களுக்கு ஓர் அன்புக் கட்டளையையும் விட்டுச்சென்றார். இவையெல்லாம் ஏதோகிட்டத்தட்ட ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்



வரலாற்றில் நடந்தேறிவிட்ட சம்பவங்கள் மட்டுமல்ல ஒவ்வோர் ஆண்டும் மீண்டும் மீண்டும் நினைவு கூரப்பட்டு வாழப்படவேண்டிய இயேசுபெருமானின் புனிததத்துவங்களாகும்.

### இயேசுவின் இறுதி இராப்போசனம்

இயேசுவின் முதாதையரான இஸ்ராயேல் மக்களைப் பொறுத்தமட்டில் அவர்களது கடந்தகால வரலாறு அவர்களுக்கு முக்கியமானது. தமது கடந்த கால அனுபவங்களை அவர்கள் இலகுவில் மறப்பதில்லை. இந்தவகையிலே எகிப்து நாட்டினின்று விடுதலைபெறுவதற்கு முந்தினநாள் இரவு அவசரக் காலத்தில் தாம் உட்கொண்ட பாஸ்கா உணவை ஒவ்வொரு ஆண்டும் மிகவும் வணக்கத்தோடு நினைவுகூர்ந்தனர். ஏனெனில் இப்பாஸ்கா உணவு எகிப்தியரிடமிருந்து இஸ்ராயேலர் பெற்றவிடுதலை நிகழ்ச்சியை மீண்டும் நினைவுபடுத்தியது. இறைவன் தமது வலியகரத்தால் பெற்றுத்தந்த விடுதலைக்காக அவருக்கு நன்றி கூறும் பெருவிழாவாகப் பாஸ்கா விழா கொண்டாடப்பட்டது. அதேவேளையில் வரவிருக்கும் மெசியா மூலமாக இஸ்ராயேல் பெறவிருக்கும் முழுமையான விடுதலையைச் சுட்டிக்காட்டும் விழாவாகவும் பாஸ்கா விழா திகழ்ந்தது. இந்த வரலாற்றுப் பின்னனி

யில் தான் இயேசு தம் சீடர்களுடன் அருந்திய இறுதி இராவுணவை நாம் அணுகவேண்டும்

இயேசுவின் இறுதி இராவுணவில் இரு முக்கியசெயல்கள் இடம்பெறுகின்றன. ஆம், இயேசு பந்தியிலிருந்துஎழுந்து குனிந்து தம் சீடர்களின் பாதங்களைக் கழுவுகிறார். இயேசுவின் இச்செயல் சீடர்களுக்கு வியப்பைத் தருகின்றது. இருப்பினும் மனுமகன்பணிவிடை பெறுவதற்கன்று பணிவிடை புரிவதற்கே வந்தார் எனும் இயேசுவின் பொன்மொழிகளை அவரது பணிவான செயல் உறுதிப்படுத்துகிறது. அத்துடன் தான் வழங்கவிருக்கும் இறுதியுணவில் பங்குகொள்ள அடக்கம், பணிவு, அன்பு போன்ற மதிப்பீடுகள் அவசியம் என்பதையும் இயேசுவின் செயல் சுட்டிக்காட்டுகிறது இயேசு பலமுறை தமது பகிரங்க வாழ்வில் பலரோடு பந்தியமர்ந்தார். சகோதரத்துவத்தை, சமத்துவத்தை வலியுறுத்தி நிற்கும் பந்தியமர்தலின் உச்சக்கட்டமாகத் தம் சீடர்களுடன் இறுதியில் பந்தியமர்கின்றார். விருந்திலே அப்பமும், இரசமும் பரிமாறப்படுவது இஸ்ராயேல் மக்களின் பண்பாடு. அப்பம் மனிதனை வாழவைக்கின்றது. இரசம் மனித இதயத்தில் மகிழ்ச்சியை ஊட்டுகின்றது. கோதுமை மணியை அப்பமாக மாற்ற. திராட்சைப் பழத்திலிருந்து இரசத்தைத் தயாரிக்க மனித ஒத்துழைப்பு அவசியமானது. இத்தனை அடிப்படைத் தத்துவங்களையும் பின்னணியாக வைத்து இயேசு தமது இறுதியுணவின்போது நற்கருணை எனும் அருட்சாதனத்தை ஏற்படுத்துகிறார். வாழ்வளிக்கும் உணவாக, மகிழ்ச்சிதரும் உணவாக, மனித ஒற்றுமையை வலியுறுத்தும் சின்னமாக இயேசுவின் நற்கருணை விளங்குவதில் ஆச்சரியமில்லை. அத்தோடு உலகமுடிவில் இடம் பெறவிருக்கும் வானகவிருந்தின் முன்சுவையாகவும் நற்கருணை விருந்தை அமைத்துத் தருகின்றார்.

இந்த வாழ்வளிக்கும் உணவைத் தினமுங் கொடுத்துக் கிறீஸ்துவின் மறையுடலாகிய திருச்சபையைக் கட்டியெழுப்ப இயேசு பணிக் குருத்துவத்தையும் ஏற்படுத்துகிறார், ஞானஸ்நானம் எனும் அருட்சாதனம் வழியாக திருச்சபையின் உறுப்பினராகும் அனைவருமே இயேசுவின் நிலையான குருத்துவத்தில் பங்குகொள்கின்றனர். இதனையே புனித அருளப்பரும் ''இயேசுக்கிறீஸ்து தம் தந்தையும் கடவுளுமானவருக்கு நம்மை அரசகுலக் குருக்களாக்கினார் என்று திருவெளிப்பாட்டில் கூறுகிறார். ஆயினும் கிறீஸ்துவின் நற்கருணைத் திருவிருந்தைத் தினமும் திருப்பலியில் பிரசன்னப்படுத்துவதில் தான் பணிக்குருத்துவத்தின் தனிப் பெரும் பண்பு வெளிப்படுகின்றது. தேர்த்தெடுக்கப்பட்டவர்கள் மீது ஆயர் தமது கைகளை வைப்பதன் மூலமாக திருநிலைப்படுத்தலின் வழியாக குருக்கள் இயேசுவின் திருப்பணியில் நேரடியாகப் பங்கு கொள்கின்றனர்.

ஆயினும் மேற்கூறிய யாவும் முழுமை பெறுவது இயேசுவின் அன்புக் கட்டளையில்தான் என்றால் அதுமிகையாகாது. ''நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளை கொடுக்கிறேன் நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள். நான் உங்களுக்கு அன்பு செய்ததுபோல் நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள்'' என்று தம் சீடர்களுக்கு அறிவுரை வழங்குகிறார். ஆம், நாம் பிறரை அன்பு செய்வதில் இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும். இயேசு நம்மை எவ்வளவு தூரம் அன்பு செய்தாரெனில் தம்மை தமது வாழ்விற்கு உணவாக, பானமாகத் தந்தார். தம் சீடர்களின் பாதங்களைக் கழுவும் அளவிற்குஅவரது அன்புப்பணி வானது. இறைமகனாய் இருந்தாலும் அடிமையின் கோலம் பூண்டு சிலுவையில் தம்மைப் பலியாக்குவதில் தான் அவரது அன்பு முழுமை பெறுகிறது.

பழைய உடன்படிக்கையின் அடிப்படையில் ஒரு மக்களினம் உருவானதுபோல இயேசுவின் புதிய நித்திய உடன்படிக்கையில் உருவாகும் திருக்கூட்டமே திருச்சபை. இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு எனும் மறைபொருளால் உருவாக்கப்பட்ட இறைமக்களாகிய நாம் பத்துக் கட்டளைகளுக்கும் பதில் அன்பையே ஒரே கட்டளையாகப் பெற்றுக் கொண்டோம். ''இதை என் நினைவாகச் செய்யுங்கள்'' என்ற இயேசுவின் கட்டளை அவரது பன்னிரு சீடர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்ட கட்டளையல்ல. அவர்கள் வழியாக இறைமக்களாகிய நம் அனைவருக்குமே அளிக்கப்பட்ட அன்புக்கட்டளையை என்றும் நினைவுகூர்ந்து நற்கருணை விருந்தில் ஆர்வத்துடன் பங்கெடுப்பதன் மூலமாகத்தான் திருச்சபை உண்மையான வளர்ச்சியைப் பெறமுடியும்.

## மக்கள் கருத்து

### வசந்தபுரம் அல்ல

தங்கள் பத்திரிகையின் (86 - 03 - 20) கடைசிப்பக்கத்தில் வெளியான செய்தியில் ''மின்கம்பத்தில் கட்டப்பட்டவர் வசந்தபுரம், கீரிமலைப் பகுதியைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது'' என்று இருந்தது. அந்த நபர் வேறு இடத்தைச் சேர்ந்தவர் அண்மைக் காலமாக எமது கிராமத்தில் வசித்து வந்தார் அவர் வசந்தபுரத்தைச் சேர்ந்தவர் அல்ல. நன்றி

அ றேபேட்
பாரதி ச. ச நிலையம்
வசந்தபுரம் இளவாலை

## இன்று

[யாழ்ப்பாணம்]

நல்லூர் பாணன்குளம் நாச்சிஅம்பாள் ஆலய சங்காபிஷேகமும் அன்னதானமும், இன்று வியாழக்கிழமை நடைபெறும்.

யாழ்ப்பாணம் கடைத்தெரு வேம்படி ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் மஹோற்சவம், கொடியேற்ற வைபவத்துடன் இன்று ஆரம்பமாகின்றது.


## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

கருவாட்டுக்குத் தேவையான அரைத்த உப்புத்தூள் விற்பனைக்குண்டு எம். ஜீ எம். 777, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 22611. [C 1432]

அண்மையில் சகல வேலைகளும் செய்த 3 ஸ்ரீ 9000 தொடர் இலக்க, வொக்ஸ்வக்கன் 1200. ஆறு வோல்டேஜ்; கார் விற்பனைக்குண்டு. வருகிற சனி. ஞாயிறு மட்டும் காலை 10 மணி தொடக்கம்; பிற்பகல் 4 மணிவரை பார்வையிடலாம். 12, நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [C 1438

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

[வரைவுள்ளது]

### வெற்றுச் சாக்கு கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் 4000 வெற்றுச்சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு உண்டு.

கேள்வி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் முடிவு திகதி 31-03-86.

பொதுமுகாமையாளர்
127, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
26-03-86. [A 519]

சரவணபவன்
மினி சினிமா
10-30, 2-30, 4-45, 7-00
ARENA
(Fight, Thrill)
Adults Only

எம்பயர் திரையில்
10-30 2-30, 6-30,
சத்தியராஜ்—கவுண்டமணி
ரசிகன் ஒரு ரசிகை

LIDO Jaffna
10-30, 2-30, 6-30
பிரதாப், ஷோபா
நடித்த
அழியாத கோலங்கள்
(புதிய பிரதி - கலர்)

வெலிங்டன்
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா கவுண்டமணி
நடித்த
நான் பாடும் பாடல்
(கலர்)

வின்ஸர் திரையில்
26-3-86 முதல்
சிவாஜி கே ஆர் விஜயா
மாதவி, ஜெயகணேஷ்,
ஸ்ரீபிரியா, விஜயகுமார்
வி. கே. ராமசாமி
நடித்த
சத்திய சுந்தரம்
(குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்). C 1435


## திட்டமிட்டபடி....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மாகும் ஊர்வலம் கொக்குவில் பகுதியால் சென்று இறுதியாக நல்லூர் ஆலயத்தைச்சென்றடையும். இரவு 10 மணிக்கு முன்பாக ஊர்வலம் முடிந்து விடுமென்றும் ஊர்வலத்தில் பங்குபற்றுபவர்களுக்காகமினி பஸ் சேவை நடாத்தப்படும் என்றும் கூட்டுஅமைப்பாளர் திரு பொன். மதிமுகராசா தெரிவிக்கின்றார். தீவட்டிக்கு எண்ணை வார்ப்பதற்கு பொது மக்கள் ஒத்துழைப்பு நல்கும்படியும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்: (ஐ)


## 2-வது வருட நினைவஞ்சலி



உயர்திரு. R. A.
பிரான்சிஸ் றணசிங்க
(Police Seargent
(P. S. 3603 பொலிஸ் சார்ஜன்ட்)

''வாழ்வு தந்த தெய்வம் வானம் சென்றதேனோ''

ஆண்டவன் படைப்பு:
1950-10-21

அநியாய அழிப்பு:
1984-03-27

''தரணியெல்லாம் ஒளி வீசிவாழவந்த தந்தையே கண்மூடித்திறக்கமுன்னே மறைந்து விட்டீர் தந்தையே. துன்பத்தை ஆற்ற வழிதெரியாது தவிக்கின்றோம்! தந்தையே மண்ணில் பணிகள் வண்ணமுற முடித்து விண்ணில் பணிகள் தொடரவென்றோ ஆருயிர் மனைவி பிள்ளைகளுடன் வாழ்ந்து மிகக் குறுகிய காலத்தில் இப்பாவ உலகை விட்டு நீங்கி இறைவனடி சேர்ந்த உமது ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அன்புடனே எம்மைப் பேணி அரவணைத்த உம் கரங்கள் மரணத்தைத் தேடி மிகவிரைவுடனே நீண்டதுவோ தருணத்தைப் பார்த்திருந்த மாபாவி துரோகிகள் மனதினிலே இரக்கமின்றி மலையதனைச்சரித்தனரோ ஐயகோ? இக் கொடுமை எப்படித்தான் நேர்ந்ததுவோ குற்றமென்ன செய்திட்டாய் கூறுமையா எங்களுக்கு அறியும் வரை எம்முள்ளம் ஆறுது! ஆறுது! தேடி நின்று வேண்டுகின்றோம் உத்தமன் ஆத்மசாந்திக்காய்.

பப்பா, பப்பா என்று கூவி அழைத்து தேடி அலைந்து எங்கும் காணோமே என்று ஏங்கிப் பரிதவிக்கும்

அன்பு மழலைகள்,
ஆருயிர் மனைவி,
அருமைச் சகோதரி,
பெற்றோர், மைத்துனர்,
மைத்துனிமார்,
உற்றார், உறவினர்.
C 1442


# தாக்குதல்கள்பற்றி புலிகள் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

நாவற்குழி இராணுவ முகாமுக்கு முன்பாக உள்ள வீதியில் தம்மால் ஏற்படுத்தப்படும் வீதித்தடையை அகற்றுவதற்காக 15 இராணுவத்தினர் வந்த சமயம் தமது இயக்க வீரர்கள் சிலிண்டர் தாக்குதல் மேற்கொண்டதாகவும் அத் தாக்குதலில் ஒரு கோப்ரல் உட்பட இருவர் பலியானதாகவும் 2பேர் காயமடைந்ததாவும் தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 6- 45 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

### 15 பேர் பலி

நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் ஹபறணைக்கு அண்மையில் உள்ள கித்துலூற்று என்ற இடத்தில் இராணுவ வாகனத்தில் வந்தவர்கள் மீது மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் 15 இராணுவத்தினர் ஸ்தலத்தில் பலியாயினர் பலர் படுகாயமடைந்தனர். தமிழீழத்தின் எல்லைப்பகுதியில் அமைந்த இந்தக் கிராமம் முன்பு தமிழ்ப்பகுதியாக இருந்து தற்போது முற்று முழுதாகச் சிங்களக்கிராமமாக்கப்பட்டுள்ளது. மூன்று வாகனங்களின் தொடரில் முன்னுக்கு வந்த கவசவாகனமே கண்ணிவெடிக்கு உட்பட்டதாகும்.

### 5 பேர் பலி

நேற்று முன்தினம் பிற்பகல் 5-30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்தில்உள்ள சிலோன் தியேட்டருக்கும் டொலர் பாமுக்கும் இடையில் ஒரு பஸ்ஸில் ஊர்காவற்படையினரும் இராணுவத்தினரும் வந்த சமயம் எமது வீரர்கள் தாக்குதல் மேற்கொண்டனர்; இதில் 5 பேர் ஸ்தலத்தில் பலி, 8பேர் காயம் இறந்தவர்களுள் 3 பேர் இராணுவம்; 2 ஊர்காவற்படையினர். (மா)

## கட்டுவன்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிமக்கள் உணவோ, குடிநீரோ பெறமுடியாதளவுதுன்பநிலைக்குள்ளானது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆகாயத்தாக்குதலின் போது போராளிகள் எவரும் பதில் தாக்குதல் நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஹெலிகொப்டர் தாக்குதலில் ஆனந்தன் [25வயது] என்பவர் ஸ்தலத்தில் பலியானவராவார். இவர் சைக்கிளில் தெல்லிப்பளை ஆஸ்பத்திரிப் பக்கமாகச் சென்றுகொண்டிருந்தபொழுது துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கானார்.

### காயமடைந்தவர்கள் விபரம்

மற்றும் பலாலி வடக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை [52 வயது], செல்வி அம்பிகா சுப்பிரமணியம் [16 வயது], சுப்பையா நாகநாதன்[ 30 வயது , ஆனந்தநாயகர் [70 வயது]. [இவர் கணேசன் பேக்கரியில்வேலைசெய்பவர்],பிரவி [22 வயது] ஆகியோரே படுகாயமடைந்தவராவர். இவர்களுள் முதல் குறிப்பிட்ட இருவர் யாழ். ஆஸ்பத்திரியிலும் மற்ற மூவரும் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## 3-வது டெஸ்ட் இலங்கை 83-3

[கொழும்பு]

பாகிஸ்தான் - இலங்கைக் கோஷ்டிகளிடையே கொழும்பு சரவணமுத்து விளையாட்டரங்கில் நடைபெற்று வரும், 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 4-வது நாள் ஆட்டம் நேற்று முடிவடையும் போது, இலங்கைக் கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 83 ஓட்டங்களைப் பெற்றிருந்தது

நேற்று ஆட்டம் ஆரம்பித்து மதியபோசன இடைவேளைக்குச் சற்றுமுன்பு போதிய வெளிச்சமின்மையால் ஆட்டம் நிறுத்தப்படும் போது இலங்கை இரண்டு விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 72 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அப்போது அர்விந்த டி சில்வா 25 ஓட்டங்களையும், குருசிங்கா 25 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் ஆட்டம் ஆரம்பித்ததும் அர்விந்த டி சில்வா ஆட்டமிழந்தார் மீண்டும் ஆட்டம் போதிய வெளிச்சமின்மையால் நிறுத்தப்படும் போது இலங்கை 3 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 83 ஓட்டங்களைப் பெற்றிருந்தது புதிய ஆட்டக்காரரான குருசிங்கா ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இன்று ஆட்டத்தின் கடைசி நாள். [வி]

## பத்திரிகையாளர் சொத்து விவரமறிய..

(கொழும்பு)

பத்திரிகை ஆசிரியர்கள், புதினப் பத்திரிகைகளினது ஆசிரியர் பகுதி ஊழியர்கள் ஆகியோர் தமது சொத்துக்களைப் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தக் கோரும் சட்டமூலம் வெகுவிரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அரசியல்கட்சி உத்தியோகத்தஸ்தர்கள், தொழிற்சங்க உத்தியோகஸ்தர்கள், பொது நிறுவனத்தலைவர்கள் முதலானோரையும் அவர்தம் சொத்து விபரங்களைப் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்துமாறு மேற்படி சட்டமூலம் கோரும். (ஷ)

## இவர்களுக்கு அலவன்ஸ் நீடிப்பு

(கொழும்பு)

வட, கிழக்குப் பகுதிகளில் விமானமோட்டும் கடமையுடன் தொடர்புபட்ட ஆகாயப்படை உத்தியோகஸ்தர்களுக்கு மேலும் ஒரு வருடத்துக்கு 'அபாய அலவன்ஸ்'வழங்கக்கோரி பாதுகாப்பமைச்சர் என்ற ரீதியில் ஜனதிபதி ஜே ஆர். ஜயவர்த்தன சமர்ப்பித்திருந்த பிரேரணைக்கு அமைச்சரவை நேற்று அங்கீகாரம் அளித்திருக்கிறது. (ஷ)

## வவனியாவில் இருமதகுகள் தகர்ப்பு

(வவனியா)

வவனியா ரயில் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள மதகும், வவனியா மன்னார் வீதிமதகும் குண்டுகள் வைத்து தகர்க்கப்பட்டுள்ளன

நேற்றுக்காலை 9-10 மணியளவில் முதல் குண்டு வெடித்த சத்தம் கேட்டது. அடுத்துத் தொடர்ச்சியாக 10-12 குண்டுகள் வரை வெடித்தன.

இது இவ்வாறிக்க இரு டெலிகா வான்களில் சறுப்புடை தரித்த ஆயுதப்படையினர் வவனியா ரயில் நிலையப் பக்கம் சென்றதாகவும்மேலும் அங்கு ஏற்கெனவே நின்ற சறுப்புடைதரித்த ஆயுதப் படையினருமாகச்சேர்ந்து துப்பாக்கிப்பிரயோகம் செய்து கொண்டு கச்சேரிக்குப்பின்புறமாகவுள்ள காட்டுப்பகுதிக்குள் சென்று மறைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## கோணேசர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லாம் எனக்கருதப்படுகிறது.

நேற்றுமுன்தினம் 25ம் திகதி கோணேஸ்வரர் தேவஸ்தானத்தில் கொடியேற்ற உற்சவம் நடைபெறஇருந்தது தெரிந்ததே. விக்கிரகங்கள் களவாடப்பட்டதால் இவ்வுற்சவம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்விக்கிரகங்கள் திருடப்பட்டது சம்பந்தமாக திருமலை இந்து இளைஞர்பேரவைச்செயலாளர் திரு செ, சிவபாதசுந்தரம், விஸ்வஹிந்து பரிஷத் இலங்கைக்கிளைக்கு புகார் செய்துள்ளார். [மா]


உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் குரோதன வருடம் பங்குனி மாதம் 14ந்திகதி (28-03 86) வெள்ளிக்கிழமை பகல் 12-14 மணிமுதல் 1-14மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்.

| எனது புத்திரன் திருநிறை செல்வன் **தியாகேஸ்வரன்** (ராஜன்) அவர்கட்கும் | எமது புத்திரி திருநிறை செல்வி **மீரா** (ரமணி) அவர்கட்கும் |
|---|---|

இறைவன் திருவருளால் திருமணவைபவம் சுன்னாகம் மயிலணி முருகமூர்த்தி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த அழைப்பை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்:

**திருமதி கே. தியாகராசா**
இராமலிங்கம் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

**தி. வடிவேலு**
குடும்பத்தினர்
(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

C-1436



வட பகுதியில் அரசாங்கத்தின் கடல் வலயச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டமையால் பாதிப்படைந்த பருத்தித்துறைப் பகுதி மீனவர்களும், மீன் பாவனையாளர்களும் பருத்தித்துறைப் பிரஜைகள் குழுத் தலைமையில் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தினர். பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம், உதவிச் செயலாளர் திரு. ஆ. தேவராஜன், பொருளாளர் திரு. ச. மகேஸ்வரன், உறுப்பினர்களான திரு வின்சென் டீ போல், திரு. பா. இரகுநாதன் ஆகியோர் ஊர்வலத்திற்குத் தலைமைதாங்க ஊர்வலம்செல்வதையும், பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் கணேசலிங்கம் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபருக்கான மகஜரை உதவி அரசாங்க அதிபர் அலுவலக நிர்வாக அதிகாரி திரு. எம். ஞானநேசனிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படம்: நமது புலோலி நிருபர் திருச்செல்வம்.)

## "பிறர் எம்மைச் சுரண்டும்நிலை இம்மண்ணிலும் வேண்டாம்"

[யாழ்ப்பாணம்]

"ஆண்டாண்டு காலமாக மலையக மண்ணில் சிலருக்கு நாம் அடிமையாக இருந்து வந்தோம். இதனால்நாம் எம்மைப் பற்றிய சிந்தனையற்றவர்களாய், எமக்கான செயல் திட்டங்கள் எதுவுமின்றி எம்மை நாமே இழந்துள்ளோம் இந்த அடிமைநிலை, எம்மைப் பிறர் சுரண்டும் நிலை இம்மண்ணிலும் தொடராது எம்மைநாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்"

இவ்வாறு மறவன்புலவு அகதிகள் குடியேற்றத் திட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அகதிகள் நல்வாழ்வுச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் மேற்படி சங்கத்தின் புதிய தலைவர் சு. செல்வராஜா பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து அவர் தமதுரையில்: "எமக்காக எம்மால் அமைக்கப்பட்டுள்ள இந்தச் சங்கம் வேறு எந்த அமைப்புக்கோ, தனிநபர்களுக்கோ கட்டுப்பட்டு போகாத வகையில் விழிப்பாக நாம் கவனித்துக்கொள்ள வேண்டும்" என்றார்.

அதைத்தொடர்ந்து நடப்பாண்டு நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது. அதன்போது தலைவராக சு. செல்வராஜாவும், உப தலைவராக கு சிவசுப்பிரமணியமும், செயலாளராக ஐ சிவராசாவும், உப-தலைவராக பி. செல்வக்குமாரும், இணைப் பொருளாளர்களாராக ஜோ. மைக்கல் திருமதி ரெங்கநாதன் ஆகியோரும் தெரிவானார்கள்.

## வாகன திருத்துநரை விடுவிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

வாழைச்சேனையில் வைத்து இனந்தெரியாதவர்களால் சில நாட்களுக்கு முன் கடத்திச் செல்லடபட்ட சுவனேரிஸ் என்ற தென்னிலங்கையைச் சேர்ந்த வாகன திருத்துநரை விடுவிக்கும்படி அவரது குடும்பஸ்தர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடத்தப்பட்டவர் வாழைச்சேனை ருஹுனு மோட்டர்ஸ் உரிமையாளர் தங்கல்லையைச் சேர்ந்தவர், இவரது மனைவியும் 4 பிள்ளைகளும் கவலையில் ஆழ்ந்திருப்பதாகவும் ஒன்றுமறியாத அவர்களுக்காக சம்பந்தப்பட்டவரை விடுவிக்கும்படியும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நாவலர்சபை வருடாந்த கூட்டம்

[யாழ்ப்பாணம்]

நாவலர் சபையின் 16 ஆவது ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் நல்லூர் நாவலர் நிலையத்தில் நடைபெறும்.

ரெருசோ ஷிப்ஸ்

TERRAZZO CHIPS

IMPORTED

- கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLLAND)
- அலுமினியத் தகடுகள் (18g. X 16 g)
- வெள்ளைச் சீமெந்து
- காபரண்டம் கற்கள் (FLOOR POLISHING BLOCKS)
- TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்குமிடம் Rs. 6/75க்கு மேல்

றம்சன்ஸ்

443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12.
தொலைபேசி: 34411 — 31511 A 410

## முதலுதவிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தினரின் வைத்திய குழுவினரினால் பொதுமக்களுக்கும் பாடசாலை மாணவ மாணவிகளுக்கும் முதலுதவிப் பயிற்சி வகுப்புக்கள் அண்மையில் சிறப்பாக நடாத்தப்பட்டன. இப் பயிற்சி வகுப்புக்கள் புனித சவேரியார் பெண்கள் பாடசாலையில் நடைபெற்றன அத்துடன் பாதிக்கப்பட்டவர்களின் துயர்துடைக்கும் பணிக்கு நிதிசேகரிக்கும்முகமாக மேற்படி இருதினங்களில் ஓர் விற்பனைத்தினமும் நடாத்தப்பட்டது. அதில் உடைகள், உணவுப் பண்டங்கள் சங்கத்தினால் பாவிக்க முடியாத பொருட்கள் போன்றவை விற்பனைக்கு விடப்பட்டன.

மேற்படி முதலுதவிப் பயிற்சியும், விற்பனைத் தினமும் மன்னார் வவனியா புனித மரியாயின் சேனை பொன்விழாவுடன் ஒருங்கிணைத்து நடத்தப்பட்டதினால் மன்னார், வவனியா பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் இதில் பங்குபற்றிப் பயனடையக்கூடியதாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

## தபால்சேவை சீராகுமா? மக்கள் கேட்கிறார்கள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு, இளவாலை மாதகல் ஆகிய இடங்களுக்கான வடபிராந்தியபோக்குவரத்துச் சபையின் பஸ் வண்டிகளின் சீரற்ற சேவையினால் இப்பகுதியிலுள்ள தபால் அலுவலகங்களில் சேகரிக்கப்படும் தபால்கள் யாழ்ப்பாணம் பிரதம தபால் அலுவலகத்திற்கு உரிய நேரத்திற்கு அனுப்பிவைக்க முடியாது இருப்பதாக புகார் செய்யப்பட்டுள்ளது

கடிதங்களை சேகரிக்க பஸ் வராததினால் ஒழுங்காக அனுப்பிவைக்க யாழ்ப்பாணம் தபாலலுவலக ஊழியர்கள் திண்டாடுவதை தினமும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. பொதுமக்கள் அவசரமாக தபாலில் அனுப்பும் கடிதங்கள் தொடர்ந்து தபாலலுவலகங்களில் தேங்கிக் கிடக்கின்றன.

தபால் சேவையை கருத்திற்கொண்டு குறிப்பிட்ட நேரங்களிலாவது இப்பகுதி வ. போ. ச பஸ் சேவைகளை நடாத்த வடபிராந்திய போக்குவரவதுச் சபையும், தபால் திணைக்களமும் ஒன்றிணைந்து உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

## "ஐக்கியத்தால் ஆரோக்கிய சமுதாயத்தை உருவாக்கலாம்"

[யாழ்ப்பாணம்]

"இந்துமக்களின் கலை கலாசாரபாரம்பரியங்களை பேணிக் காப்பது இந்து இளைஞர்களின் கலையாயபணியாகும். இப்பணியை நாம் செய்வது மற்றெந்த மதத்தையோ அல்லது அவை சார்ந்த ஸ்தாபனங்களையோ எதிர்ப்பதாகாது. அனைவரது ஐக்கியத்தைக் கட்டி வளர்ப்பதன் மூலம் தான் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதும்அற்புத சாதனைகளை சாதிப்பதும் சாத்தியமாகும்" என்று சுன்னாகம் இந்து இளைஞர் சங்கக் கருத்தரங்கில் உரையாற்றிய சங்கத்தின் ஆலோசகர் திரு. சபா புஷ்பநாதன் தெரிவித்தார்.

சுன்னாகம் ஸ்ரேமன் கத்தோலிக்க பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில் சங்கத் தலைவர் திரு. செ. தேவலோகேஸ்வரன் பேசுகையில், "ஒழுக்கமுள்ள சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் இளைஞர்கள் பல அடி முன்னேறி விட்டார்களெனினும் எதிர்காலசந்ததியினரின் கல்வி பாழடைந்து விடாதபடி பார்த்துக் கொள்ளுவது எமது முக்கிய கடமையாகும்" என்றார்.

சங்க ஆலோசகர் சபை உறுப்பினர் திரு செ. குலசிங்கம் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

## இடமாற்றம்

[பண்டத்தரிப்பு]

யாழ். அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பகுதியில் மின்சார அத்தியட்சகராகக் கடமையாற்றிய திரு. சி பரமேஸ்வரன் இம்மாதம் தொடக்கம் பதவி உயர்வுடன் யாழ் அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்திற்கு தெல்லிப்பளை கிராமசபை உப அலுவலகப் பகுதியில் மின் அத்தியட்சகராக கடமையாற்றிய திரு. எஸ். ஆனந்தராசா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## பனம்பொருள் கண்காட்சி

[கிளிநொச்சி]

மீசாலை மாதர் சங்கத்தினர் ஏற்பாடுசெய்த பனம்பொருள் கண்காட்சி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

மாதர் சங்கத் தலைவியும், ஆசிரியையுமான திருமதி யோ. செல்லையா தலைமையில் நடைபெற்ற இக்கண்காட்சியில் பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் க நடராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மீசாலை மாதர் சங்கத்தினரின் சேவைகளை வெகுவாகப் பாராட்டிப் பேசியதோடு பனம்பொருள் அபிவிருத்திக்காகத் தமது சபையின் சார்பில் நிதியுதவி அளிக்கப்போவதாகவும் கூறினார்.

இரு நாட்கள் நடைபெற்ற இக்கண்காட்சியைப் பெருந்தொகையானோர் பார்வையிட்டுப் பாராட்டுத் தெரிவித்தனர்.

## அகதிகளுக்கு உடுபுடவை

[உடுவில்]

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட இணுவில், உடுவில், கந்தரோடை, சுன்னாகம் ஆகிய பகுதிகளில் அகதிகளாக வந்திருக்கும் பல குடும்பங்களுக்கு உடுபுடவைப் பார்சல்கள் வழங்கப்பட்டன. கிராமசேவையாளர்கள். நிர்வாக உத்தியோகத்தர்கள் முன்னிலையில் சேலைகள், சாரங்கள், துணிவகைகள், தேயிலைப்பைக்கட்டுகள், நெஸ்பிறே மா போன்ற பொருட்கள் அடங்கிய பார்சல்கள் வழங்கப்பட்டன. சென் ஜோன்ஸ் ஸ்தாபனத்தின் ஆதரவில் இப் பொருட்கள் வழங்கப்பட்டன.

## 100க்கு மேற்பட்ட வழக்குகளை தீர்த்தது

(மாவிட்டபுரம்)

"தெல்லிப்பழை வடமேற்கு-இளவாலை சமாதான நீதிச் சபை 100க்கு மேற்பட்ட வழக்குகளை தீர்த்துவைத்து சிறந்தமுறையில் இயங்கிவருவது பாராட்டப்படவேண்டியது."

இவ்வாறு வலி-வடக்குஉதவி அரசாங்க அதிபர் திரு சி. இராசரத்தினம் தெல்லிப்பழை வடமேற்கு இளவாலை சமாதான நீதிச்சபை வருடாந்தக் கூட்டதில் கலந்துஉரையாற்றுகையில் கூறினார்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் செல்வி சாந்தி சுப்பிரமணியமும் பாராட்டிப் பேசினார்.

மேற்படி சபைத் தலைவராக திரு. செ. பத்திநாதரும், செயலாளராக திரு க குழந்தைவேலுவும், பொருளாளராக திரு ஆ நடராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

வல்வையில்

# மீன்பிடி, விவசாயம் பாதிப்பு!

## அரசஅதிபர், பிரிகேடியரிடம் முறையீடு!!

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை இராணுவ முகாம் அமைந்துள்ள சுற்றாடலில் வாழும் குடும்பங்கள் வெளியேறுவதாலும், வெளியேற்றப் படுவதாலும் இப்பகுதி மீன்பிடித் தொழில் மட்டுமல்ல விவசாயத்தொழிலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுவினர் யாழ் அரசாங்க அதிபரிடம் முறையிட்டுள்ளனர்.

இராணுவ பிரிகேடியரிடமும் இதுசம்பந்தமாகப் பேசியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். அரசாங்க அதிபரிடம் மேற்படி குழுவினர் இப்பகுதி மக்களின் நிலைமைகளை எடுத்துக் கூறியபோதுமேலும் தெரிவித்ததாவது:

வல்வெட்டித்துறை இராணுவமுகாமின் பாதுகாப்புக்காக இம்முகாம் அமைந்துள்ள பகுதிகள் துப்பரவு செய்யப்பட்டு வருவதால் இப்பகுதி மக்கள் தம் வீடுகளைவிட்டு வெளியேறுகின்றனர். இவ்வாறு வெளியேறும் மக்களின் வீடுகளில் விவசாய உற்பத்திப் பொருட்களான வெங்காயம் முதலியன சீருடை அணிந்துள்ளவர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கொள்ளையடிக்கப்பட்ட வெங்காயங்களின் பெறுமதி மட்டும் சுமார் 1 லட்சம்ரூபாவாகும். இத்துடன் வெளியேறும் மக்களின் வீடுகளுக்குச் சேதம் விளைவிக்கப்படுகிறது. மேலும் வீடுகளில்உள்ள குளிர்சாதனப் பெட்டிகள் போன்ற பிற பொருட்களும் எடுத்துச் செல்லப்படுவதாக எமக்குத் தகவல்கள்கிடைத்த வண்ணம் உள்ளன.

வல்வெட்டித்துறை இராணுவ முகாமினாலும், கடல் வலயச் சட்டத்தினாலும் வல்வெட்டித்துறை வாழ் மீனவர்கள் விவசாய மக்களையும்குடி எழுப்பும் நடவடிக்கைகளால் இப்பகுதி விவசாயம், மீன்பிடி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனையிட்டு உடனடி நடவடிக்கைகளை அரசாங்க அதிபர் எடுக்கவேண்டும் என வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழுவினர் தெரிவித்துள்ளனர். இதே வேண்டுகோளை இராணுவ பிரிகேடியரிடம் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

## 'பாரபட்சமற்ற நீதியை வழங்கும்'

[யாழ்ப்பாணம்]

''யாழ் பெரியகடை இணக்க சபையானது எல்வித பாரபட்சமுமின்றி நடைமுறைச் சாத்தியத்துடனான நீதியை வழங்கும். இது யாழ். பிரதான வீதி, கே. கே. எஸ். வீதி, கன்னாதிட்டி வீதி, நாவலர் வீதி, இராசாவின் தோட்டவீதி ஆகிய வீதிகளினால் உள்ளடக்கப்பட்டது.'' என்று மேற்படி இணக்க சபையின் செயலாளர் திரு. க. சுவீந்திரன் கடந்த செவ்வாயன்று நாவலர் வித்தியாலயத்தில் நடைபெற்ற இணக்க சபையின் விசேட பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இணக்க சபையின் தலைவர் ஈ. ஆர். திருச்செல்வம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் செயலாளர் தொடர்ந்து பேசுகையில், தமதுஅழைப்பை ஏற்று வந்து இணக்க சபையின் சிறந்த செயற்பாட்டிற்கு ஆதரவும், ஆலோசனையும் வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகக் கூறினார்.

## ''விளையாட்டுப் போட்டிகள் மரண ஓலங்களின் மத்தியிலும் நடைபெற்று வருகின்றன''

(சாவகச்சேரி)

''இன்று எம் மத்தியில் சதா ஒலித்துக்கொண்டிருக்கும் மரண ஓலங்களுக்கு மத்தியிலும், கிராமங்களில் விளையாட்டுத்துறைகளை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகள் இடம்பெறுவது மனத்துக்கு ஒருவகை இன்பம் தருவதாகவுள்ளது''

இவ்வாறு கைதடிகலைவாணி வித்தியாலய அதிபர் திரு நா. கந்தையா நவபுரத்தில் நடைபெற்ற கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி பரிசளிப்பு விழா நிகழ்ச்சியின் போது தெரிவித்தார்,

கைதடி நவபுரம் விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பரிசளிப்பு வைபவம் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. ஸ். தங்கராசா தலைமையில் நடைபெற்றது.

சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டிய வரணி விளையாட்டுக்கழகத்துக்கும், நாவற்குழி கழகத்திற்குமான பரிசில்களை சாவகச்சேரி சமாதான சபை அமைப்பாளர் திரு வீ எஸ். துரைராஜா வழங்கினார்.

## ''நீதிக்காகப் பெண்கள் போராடவேண்டும்''

(மாவிட்டபுரம்)

சர்வதேச மகளிர் ஆண்டில் பிலிப்பைன்சில் ஒரு பெண் பணி நீதியை நிலைநாட்டினார். அதேபோலப் பெண்களும் நீதிக்காகப் போராடி எம் கலை, கலாசார பண்பாடுகளைப் பேணிக்காக்கத் திடசங்கற்பம் எடுக்கவேண்டும்.''

இவ்வாறு தெல்லிப்பழை ப நோ கூ. சங்கத் தலைவர் திரு சி சிவமகாராசா தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் சர்வதேச மகளிர் ஆண்டை ஒட்டி நடந்த கூட்டத்தில் பேசுகையில் கூறினார்

மகளிர் குழு தலைவி திருமதி சகிதேவி கந்தையா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

''மகளிர் ஆண்டில் மகளிர் தமிழ் கலை கலாசாரப் புரட்சியில் ஈடுபடவேண்டும். பொருளாதாரத் துறையிலும் நாட்டம்கொள்ளவேண்டும். இன்று கண்ணீரும், கம்பலையும் காட்சிதரும் மகளிர் நீதிக்காகப் போராடவேண்டும் இன்று மகளிர் ஆண்டில் பிலிப்பைன் நாட்டில் ஒரு பெண்மணி நீதியை நிலைநாட்டினார் அதேவகையில் எம் பெண்களும் நீதிக்காகக் குரல் கொடுக்கவேண்டும்' என்றார்

தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி திரு எஸ் கதிரவேற்பிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். (இ)

## கலைக்கூறு பயிற்சி நெறி

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை மாவட்டத்தில் இருபது பாடசாலைகளில் புதிய சாரணர் குழுக்களை அமைக்கும் நோக்குடன் கலைக்கூறு பயிற்சிநெறி ஒன்று நடத்தப்பட்டுவருகிறது.

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பயிற்சி நெறி மாவை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

94 ஆசிரியர்கள் கலந்து பயிற்சிபெறும் இப்பயிற்சி நெறியை திரு. நா. போஜன் நெறியாளராகஇருந்து நடத்துகிறார்.

## வலைப்பந்தாட்டம்

[மாவிட்டபுரம்]

யாழ். வலைப்பந்தாட்டச் சங்கத்தால் நடாத்தப்படும் சுற்றுப்போட்டியில் ஏழாலை முத்தமிழ் விளையாட்டுக்கழகம் உடுவில் ஏசியன் விளையாட்டுக் கழகக்தை வென்றது.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டரங்கில் நடைபெற்ற மேற்படி சுற்றுப் போட்டியின் ஒரு அங்கமாக நடந்த இப்போட்டியில் ஏழாலை முத்தமிழ் விளையாட்டுக்கழகம் 20 புள்ளிகளையும், ஏசியன் விளையாட்டுக்கழகம் 12 புள்ளிகளையும் பெற்றன.

## பங்களிப்பு நல்குமாறு கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

''வெகுஜனப் போராட்டமும், ஆயுதப் போராட்டமும் இரட்டைக் குழல் துட்பாக்கி போன்றது. ஆகவே எதிர்வரும் 27ம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ள தீவட்டிப் போராட்டத்தில் அனைவரும் தமது பங்களிப்பை நல்கவேண்டும்'' என்று அண்ணா தி. மு, க, பொதுச் செயலாளர் பொன். மதிமுகராசா அறிக்கையொன்றில் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

## மருத்துவ சேவை

[புலோலி]

மாதனை ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு நிலையம் கர்ப்பிணிகளுக்கும், குழந்தைகளுக்குமான மருத்துவ சேவைகளை ஆரம்பித்துள்ளது.

கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்ட இம்மருத்துவ சேவைகளை டாக்டர் எம். லலிதகுமார் உட்பட இன்னும் பல மருத்துவ நிபுணர்கள் மேற்கொண்டனர். மாதா மாதம் இம்மருத்துவ சேவைகள் இடம் பெறுமென மாதனை ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு நிலையத் தலைவர் தெரிவித்தார்.

## நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பெரியகடை ஐக்கிய நாணய சங்கத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு சு.திருநாவுக்கரசு, உப தலைவர்: எப எஸ் றகீம், காரியதரிசி: த, சுப்பிரமணியம், தனாதிகாரி. பி சோமசுந்தரம். ஏழு பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

# இன்றைய பலன்

மாதம்- பங்குனி
திகதி- 14(1986-3-27)
கிழமை- வியாழன்
திதி- பிரதமைகாலை 7 40ன் மேல் துதியை
நட்சத்திரம்- சித்திரை பின்இரவு வரை

மேடம்; இறை வழிபாடு மேலிடும். இதயத்தில் அமைதியும் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சியுமுண்டு.

இடபம்: தானிய நஷ்டத்திற்குமிடமுண்டு வியாபாரிகள் கவனம்வேண்டும். வாகனச்சாரதிகளுக்கு அவதானம் நன்று

மிதுனம்: முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்களுக்கு உதவ முன்வருவர் புண்ணிய விருப்பும் மேலிடும். பிதாவழிச்சுகமும் உண்டு.

கடகம்: உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள். தொழில்துறையில் முன்றேற்றமுண்டு வெளியிடத்துச் செய்தியும் கிடைக்கும்.

சிங்கம்: மெத்தவும் பொருள் சேரும். மேலிடத்து ஆதரவு தப்பாமல்கிடைக்கும். தேனை செய்தியுடன் வாழ்வும்உண்டு.

கன்னி: அந்நியர் மத்தியில் அதிகம் பழக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம் வயிற்றுக் கோளாறுக்குமிடமுண்டு. உணவு விடயத்தில் கவனம் செலுத்தவும்.

துலாம்: மனம் நிறைந்த சம்பவம் இடம்பெறும். பெரியவர்களின் ஆசி தாராளமாகக்கிடைக்கும். வரவுக்குமிடமுண்டு

விருச்சிகம்: குடும்பத்தில் சிறுபூசல் தலைதூக்கும். பெரியவர் ஒருவருடன் அபிப்பிராய பேதங்கள் தோன்றக்கூடும். ஆத்திர உணர்ச்சியைத் தவிர்க்கவும்

தனுசு; சனிவான நினைவுளில் மிதந்து செல்வீர்கள். சகோதரபாசம் தலைதூக்கும். முன்னேற்றமுண்டு

மகரம்: செய்தொழில் சிறப்புக்கிடைக்கும் வழக்கு விவகாரம் வெற்றியைத் தரும். நீண்டநாள் பிணி நிவர்த்தியாகும்

கும்பம்: தூரத்துப்பயணம் துயரத்தைத் கரும் வருமானத்தில் வீழ்ச்சி தென்படும். வைத்தியச் செலவிற்குமிடமுண்டு.

மீனம்: குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும். இசைத்துறையில இன்று ஆர்வம் பிறக்கும், பிள்ளைகளினால் பெருமைக்குமிடமுண்டு.

திருமதி
வே. ரவீந்திரன்

## மருதடி விநாயகர் உற்சவம்

[வண்ணார்பண்ணை]

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இம் மாதம் 29ம் திகதி சனிக்கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

சித்திரை புதுவருடத்தினமான 14ம் திகதி திங்கட்கிழமை வழமைபோல் தேர்த் திருவிழாவும் 15ம் திகதிகாலை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

உற்சவகாலப் பிரதம குருவாக நவாலியூர் பிரம்மஸ்ரீ வெங்கடசுப்பிரமணியக் குருக்கள் கடமையாற்றுவார்.

## மலேசியா பயணமானார்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய தோட்டத் தொழிற் சங்க தொழிலாளர் கல்விப் பிரிவுத்துணை இருக்குனரான செல்வி சிவக்கொழுந்து மலேசியா பயணமானார்.

மலேசியாவிலுள்ள டொன் என் பெவின்' கல்வி நிறுவனத்தில் நடைபெறும் தோட்டத் தொழிற்துறை தொழிலாளர்கள் பற்றிய சருத்தரங்கில் இலங்கை தொழிலாளர் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளும் இவர்' உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உருப்பராய் இந்துக் கல்லூரி பழைய மாணவியுமாவார் (பி)

## கொழும்புத்துறையில் இணக்கசபை

[யாழ்ப்பாணம்]

கடந்த வெள்ளி கிழமை காலை கொழும்புத்துறை கயிற்றுத் தொழிற்சாலை மண்டபத்தில் கொழும்புத்துறை மக்கள் இணக்கசபை ஒன்றை ஏற்படுத்தியுள்ளனர். அப்போது இணக்கசபையின் கடமைகளும் இணக்கசபைக்கான யாப்பும் தயாரிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டது

உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. இரா. செல்வராசா உப-தலைவர்: திரு ச. இராசையா, செயலாளர்: திரு, செ. நரேந்திரன், உப-செயலாளர்: திரு சி மகேசன், பொருளாளர்: திரு. க. நடராசா. உப- செயலாளர்: திரு. ஐ. பேரானந்தம்.

## புதிய நிர்வாகிகள்

(அராலி)

அராலி வடக்கு விவசாய அபிவிருத்திச்சங்க புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர்; திரு. நா. த. நடராசா, உப-தலைவர்: திரு ச- முத்துக்குமாரு காரியதரிசி திரு மச. பரமசிவப்பிள்ளை உப-காரியதரிசி: திரு சு. ஞானேஸ்வரன், தனாதிகாரி: திரு. செ. கந்தசாமி, கணக்குப்பரிசோதகர்கள்: திருவாளர்கள்: நா. நடனசண்முகநாதன், ஆ செல்வரத்தினம்

ஒன்பது பேர் கொண்ட நிர்வாகசபையும் ஐந்து பேர் கொண்ட விசாரணைக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது

## தந்தை செல்வாவின் பிறந்த தினத்தில் விசேடநிகழ்ச்சிகள்

(மாவிட்டபுரம்)

தந்தை செல்வாவின் 88வது பிறந்ததினத்தையொட்டி இம்மாதம் 31ம் திகதி தெல்லிப்பழையில் விசேட நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன.

இந்து ஆலயங்களில் விசேட பூசை ஆராதனைகள் நடைபெற இருக்கின்றன தெல்லிப்பழை தேவாலயத்தில் நடைபெறும் விசேட ஆராதனையில் சென் ஜோன்ஸ் தேவாலய வணபிதா. ஜே. சர்வானந்தன் நினைவுப்பேருரை நிகழ்த்துவார்.

## பிரஜைகள் குழுக் கூட்டம்

(மாவிட்ட புரம்)

கீரிமலை பிரஜைகள் குழுவின் முதலாவது ஆண்டுக் கூட்டம் இம்மதம் 30ந் திகதி நடைபெறவிருக்கிறது

கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் கடந்த வருடம்மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், நிதியறிக்கை பற்றியும் ஆராயப்படவிருக்கிறது

## அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஐக்கிய நாடுகள் சங்கக்கிளை பெரியஅளவிலான உலகப்படமொன்றை 23-3-86 அன்று வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சுவாமி மகாவித்தியாலயத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளது.

## வடக்கு, கிழக்கில் மக்களுக்கெதிரான முழு அளவு யுத்தம் நடக்கிறது

### தென்பகுதி மக்களுக்கு 'மேர்ஜ்' விளக்குகிறது

(யாழ்ப்பாணம்)

''வடக்கு-கிழக்கில் நடைபெறும் சம்பவங்கள் அரசாங்கம் கூறுவதுபோல் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் அல்ல; இது இப்பகுதிகளில் உயிர்களேயும் மக்களின் சொத்துக்களேயும் மாத்திரமின்றி விவசாயத்தையும் கூட அழித்தொழிக்கும் வகையில் நடத்தப்படும் மக்களுக்கெதிரானமுழுஅளவிலான ஒரு யுத்தமே என்பதை முழு நாடுகளும் அறியவேண்டும் எனவிரும்புகின்றோம் ''

இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் வடமாகாண அமைப்பு விடுத்துள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளது

இலங்கையின் வடக்குக் கிழக்குத் தவிர்ந்த பகுதிகளில் வாழும் மக்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக விடுக்கப்பட்டுள்ள மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அரசின் ராணுவ நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டும் தீவிரப்படுத்தப்பட்டுமிருப்பதால் விமானமூலம் குண்டு வீசுவதும் ஹெலிகொப்டர் மூலம் சுடுவதும் நடைமுறைக்கு வந்துள்ளது, இவ்விரு நடவடிக்கைகளும் மனிதஉயிர்களுக்கும், சொத்துக்களுக்கும், விவசாயத்திற்கும் பெருத்த நட்டத்தை விளேவிக்கின்றன.

கடந்த மாதம் 19ம் திகதி அக்கரைப்பற்று தங்கவேலாயுதபுரத்தில் ராணுவ அட்டூழியம் அதிகரித்து நெல் அறுவடையில் ஈடுபட்டிருந்த 60 அப்பாவி விவசாயிகள் கொல்லப்பட்டு சடலங்கள் எரிக்கப்பட்டுள்ளன. இச்சம்பவம் இடம்பெற்ற இடத்தில் சிதறிக்கிடந்த மனித மண்டை ஓடுகள் அட்டூழியத்தின் அகோரத்தை எடுத்துக்காட்டுவதாய் இருந்தன. அரச செய்தி ஸ்தாபனங்கள் மூலம் முழுமையும் திரிக்கப்பட்ட செய்திகள் வெளியிடப்படுகின்றன. உண்மையைத் திரிப்பது மட்டுமன்றி நடைபெறுதவைகளேயும் உருவாக்கி வெளியிடப்படுகின்றன. மிருகத்தனமான நடவடிக்கைகள் தீவிரப் படுத்தியிருப்பதும் தூண்டுதல் மூலம் நடத்தப்படும் ராணுவ அட்டூழியங்களே நியாயப்படுத்தக் காரணங்கள் கண்டு பிடிப்பதும் இனப்பிரச்னேக்கு அரசு ராணுவத் தீர்வை எற்படுத்தவே தீர்மானித்து விட்டது என நாம் கருத இடமிருக்கின்றன. மத்திய கிழக்கில் இஸ்ரேல் எவ்வாறு செய்கின்றதோ அதே விதமாகவே இங்கு தாக்குதல்களும் அழிவு வேலேகளும் நடத்தப் படுகின்றன. இந்த நிலேமையில் இப் பகுதிகளிலுள்ள மக்கள் தம்மை இந்த அரசினுல் ஆளப்படும் ஒரு பகுதியினராக கருதமுடியாது. அரசு தனது நடவடிக்கைகள் மூலம் பிரிவினேயை மாற்றமுடியாது நிதர்சனமாக்கி வருகின்றது சிங்கள மக்களுக்காகப் போராடுவதாகக் கூறுகிறவர்கள் தான் அம் மக்களுக்கு மிகப் பெரிய நாசத்தை விளேவிக்கிறுர்கள் என்ற உண்மையை சிங்கள மக்களுக்குக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

## வயோதிபமாதை வாளால் வெட்டிய 'கறுப்புடையினர்'!

(வவனியா)

வவனியா - இறம்பைக்குளம் என்னும் இடத்தில் கறுப்புடையில்வந்த எட்டுப்பேர் ஒரு வயோதிபப்பெண்ணே வாளால் வெட்டியும், ஒருவீட்டைக் கொள்ளேயடித்தும் சென்றனர்.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இக்கொள்ளேச் சம்பவத்தில், கறுப்புடை அணிந்த இந்த எட்டுப்பேரும், ரெங்கம்மா (வயது-71)என்ற வயோதிபப்பெண்ணின் வீட்டில் புகுந்து கொள்ளேயிடமுயன்றதாகவும் அதன்போது ஏற்பட்ட வாக்குவாதத்திலேயே அவர் வெட்டப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதேசமயம் அந்தக்கொள்ளேயர்கள் வேறுஒருவீட்டினுள் புகுந்து இரு தொலேக்காட்சிப் பெட்டிகள் உட்படப் பெறுமதியானபொருட்களேக் கொள்ளேயடித்துச் சென்றுள்ளன

படுகாயத்துக்குள்ளான வயோதிபப்பெண் வவனியா வைத்தியசாலேயில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த கொள்ளே நாடகத்தை நடத்திய எட்டுப்பேரும் சிங்களத்திலேயே பேசினுர்களாம்.

## சப்புகஸ்கந்தைச் சம்பவம்: உரிமை கோருகிறது செம்படை

[யாழ்ப்பாணம்]

''எமது செம்படைக் கெரில்லாக்களினுல் திட்டமிட்டு அனுப்பப்பட்ட சிவப்புநிற 8406629 இலக்க சிலிண்டரே இம் மாதம் 25ம் தேதி சபுகஸ்கந்தையிலுள்ள எல். பி காஸ் தொழிற்சாலேயில் வெடித்தது'' என்று தமிழீழ செமபடை நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஆதாரமாக அமையும் அதன் பொருளாதாரத்தினே நிர்மூலமாக்கும் எமது நடவடிக்கைகளில் இதுவும் ஒன்ருகும்'' எனக் கூறப்பட்டுள்ளது.

## யாழ். ப. நோ. ச. ஊழியர் வேலேநிறுத்த முஸ்தீபு

[யாழ்ப்பாணம்]

யாழ் ப. நோ. கூ. சங்க நிர்வாகத்தில் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டு இதுவரை நடைமுறைப்படுத்தப்படாத கோரிக்கைகளே உடன் நடைமுறைப்படுத்தாவிட்டால் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 165 ஊழியர்கள் அடுத்தமாதம் முதலாம் தேதி வேலேநிறுத்தம் செய்ய முடிவுசெய்துள்ளனர்.

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் யாழ். பட்டணக் கிளேகூடி இந்தமுடிவை எடுத்து நிர்வாகத்திற்கு அறிவித்துள்ளது.

இந்த வேலேநிறுத்தத்தினுல் 39 சங்கக்கிளேகளிலும், 49 உத்தரவுபெற்ற வியாபாரிகள் கடைகளிலும் ஏப்ரல் 1ம் திகதி வழங்கப்படவிருக்கும் மீனவர் முத்திரை, உணவு முத்திரை தடைப்படலாம் எனக்கூறப்படுகிறது. [க]

## வல்வையில் 4 வீடுகள் தகர்ப்பு!

(வல்வெட்டித்துறை)

நேற்றைய தினம் மாலேயில் வல்வெட்டித்துறை இராணுவ முகாமைச்சேர்ந்த இராணுவத்தினர் முகாமுக்கு முன்பாகவுள்ள 4 பெரிய வீடுகளேக் குண்டு வைத்துத்தகர்த்தனர் ஏற்கெனவே இச்சுற்றுப்புறச் சூழலிலுள்ள பெறுமதியான பல வீடுகள் தகர்க்கப்பட்டு விட்டன.

## மன்னர் நிலேமை

(மன்னர்)

மன்னரில் ரயில் நிலேய வீதியில் துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்டதைத் தொடர்ந்து நடமாடிக் கொண்டிருந்த பொதுமக்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினர்.

நேற்றுக்காலே 8-30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

திரும்பவும் இராணுவத்தினர் இருதடவை மோட்டர் 'ஷெல்' களால் தாக்குதல் மேற்கொண்டதில் ஒருவர் காயமடைந்தார். இவர் மன்னர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (மா)

## ரயில் எரிப்பு: குழு ஆராயும்

(கொழும்பு)

கொழும்பு நோக்கிவந்த வடபகுதி ரயில்வண்டி தீவிரவாதிகளால் எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதுபற்றிய அறிக்கை ஒன்று சமர்ப்பிப்பிதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ரயில் எஞ்சின் குண்டுவைத்து தாக்கப்பட்டதுடன் 12 ரயில் பெட்டிகளும் சேதமாகின.

வடபகுதிக்கான சகல ரயில் சேவைகளும் மறுஅறிவித்தல்வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன: (ச)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126,

## யாழ். தாதிகளுக்கும் 'சுகவீனம்'

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் சுமார் 200 தாதிகள் நேற்று வேலேக்குச் செல்லவில்லே.

இவர்கள் சுகவீனம் காரணமாக வேலேக்கு வரவில்லே என அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

அலவன்ஸ் கோரி வேலே நிறுத்தம் செய்யும்தாதிகளுக்கு ஆதரவாகவே இவர்கள்வேலேக்குச் செல்லவில்லேயென்றுகூறப்படுகிறது,

இதேவேளேயில் தற்போது வேலேநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தாதிமார் சங்கத்திற்கு ஆதரவாக 14 தொழிற்சங்கங்கள் வேலேநிறுத்தம் செய்ய இருக்கிறது. [ய-வா]

## யாழ். பௌத்தவிஹாரையில் தங்கத் தகடுகள்

[யாழ்ப்பாணம்]

தாக்கப்பட்டிருந்த யாழ். நாகவிகாரை இடிபாடுகளுக்குள்ளிருந்து தங்கத்தால் உருவமைக்கப்பட்ட பௌத்த சின்னங்கள் துப்பாக்கி தாங்கிய இனந்தெரியாத சிலரால் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடிந்துகிடந்த கட்டிடங்களுக்குள் சிலர் தேடுதல் நடாத்தப்பட்டபொழுதே தங்கத்திலான தகடுகள் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. [மா]

## மரண அறிவித்தல்

### குப்பிழான் வ. பண்டிதர்

குப்பிழானேச் சேர்ந்த திரு. வ. பண்டிதர் காலமாகி விட்டார். இவர் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலே முன்னுள் மேற்பார்வையாளரும், பிரபல சமூக சேவையாளருமாவார். இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், அமிர்தகௌரி, விஜயலக்சுமி, பிரணவரூபசோதி[அபுதாபி] ஆகியோரின் அன்புத் தந்தையும், சிதம்பரநாதன், சிவநேசன் [ஜேர்மனி] ஆகியோரின் அருமை மாமனுரும், சின்னத்துரையின் [வவனியா] அன்புச் சகோதரனும், பாலசுப்பிரமணியம், பாலகிருஸ்ணன், பரமேஸவரி, சுந்தரகணேசமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் விஜிகரனின் பேரனுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு குப்பிழானில் நடைபெறும்.

தகவல்:
ச. சுந்தரகணேசமூர்த்தி

C 1444

### திருமதி சோதீஸ்மதி அரியரட்ணம்

திருமதி சோதீஸ்மதி அரியரட்ணம் 26- 3- 86ல் சிவபதம் அடைந்தார் அன்னர் காலஞ்சென்ற திரு. H.S. அரியரட்ணத்தின் (Excise Inspector) அன்பு மனேவியும், இந்திராணி (ராசாத்தி), குலேந்திரன் (நைஜீரியா), ரட்ணசோதி (ஆசிரியை, சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலே) ஆகியோரின் அருமைத் தாயாரும் K. அப்புலிங்கம் (Rtd Co- operetive Inspector), Dr. ஞானகுலேந்திரன் (இந்தியா], Lt. Col. K. பாலேந்திரா (யாழ். மத்திய கல்லூரி] ஆகியோரின் அன்பு மாமியாரும், தவராஜன், ரதீந்திரன் (Canada), பாலயசோதான், ஸ்ரீ கிருஷ்ணு, ஸ்ரீ நாராயணி (இந்தியா), பாலபிசராந்தன் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார் அன்னுன் ஈமக்கிரியைகள் 27- 3- 86 வியாழக்கிழமை காலே 11 மணியளவில் 17/32 A, பண்டாரக்குள மேற்கு ஒழுங்கை, நல்லூரில் நடைபெறும்.

[C 1443]

### திரு. மு. சி. கனகரத்தினம்

நல்லூர் 13/3, நாயன்மார் வீதியைச் சேர்ந்த இளேப்பாறிய ஆசிரியர் திரு. மு. சி. கனகரத்தினம் 25-3-86 சிவபதமடைந்தார் இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், தனலட்சுமி, கணேசலிங்கம், சற்குணேஸ்வரி, இராசேஸ்வரி (தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புசபை, யாழ்ப்பாணம), யோகநாதன் (பிரான்ஸ், பரமநாதன் (நைஜீரியா) ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவஞானம் நைஜீரிய ), நாகராஜேஸ்வரன் (சவுதிஅரேபியா). ஸ்ரீரஞ்சனி, தமயந்தி ஆகியோரின் மாமனுருமாவார். அன்னுரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக அன்னுரின் இல்லத்திலிருந்து 27-3-86 காலே 10 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் உற்ருர், உறவினர், நண்பர்கள் இத்தகவலே ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் வேண்டப்படுகின்றனர்.

இங்ஙனம்,
மனேவி, பிள்ளேகள்

(C 1429)

### மாணிக்கம் துரைராசா

பிரபல வர்த்தகரும் S. M T றவல்ஸ் சேவிஸ் உரிமையாளரும், கிளிநொச்சி S. M. T கட்டிட உரிமையாளரும், சமூகத் தொண்டருமான மாணிக்கம் துரைராசா S. M. T. வவனியாவில் அகால மரணமானுர் இவர் காலஞ்சென்ற வர்த்தகப் பிரமுகரும் சமூக சேவையாளருமான S. மாணிக்கம், இராசமணி தம்பதிகளின் மகனும், கமலாவின் பெருமகனுமாவார். அன்னுர் தனலட்சுமியின் அன்புக் கணவரும், சிவகுமார் [யாழ். மத்திய கல்லூரி], சதீஸ்குமார், சுயலெட்சுமி, இராசகுமார், நிமலக்குமார் (அச்சுவேலி மகா வித்தியாலயம்), இராஜலெட்சுமி (அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி], ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற முத்தர், சின்னப்பிள்ளே ஆகியோரின் அன்பு மருமகனும், அருந்ததி, நவமணி, சிவமூர்த்தி (வீடியோ கலாமினி அச்சுவேலி, கலாவதி ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி உரிமையாளர்), பத்மாவதி, கலா, சித்திரா, சியாமளா, வசந்தா, வேல்அழகன், கண்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சின்னத்துரை [அதிபர் ஸ்ரீ விப ஸ்ரீ பாடசாலே, அச்சுவேலி], ஜெகசோதி, செல்வம், பாக்கியநாதர் சிவபாதம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 7-03-86 வியாழக்கிழமை (இன்று) காலே 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அச்சுவேலி வல்லே மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலே உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
அச்சுவேலி.

26-03-86

C 1437